TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

PG TRB

2020-2021

UNIT-1

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 1 (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்
12 ஆம் வகுப்பு வரை
உள்ள பொதுத் தமிழ்
மற்றும்
சிறப்புத் தமிழ் (+1)
சிறப்புத் தமிழ் (+2)

COMPETITIVE EXAM
FOR
PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 Salem: 93602 68118

PG TRB HISTORY 2020 - 21

UNIT I (VOLUME-I)

திராவிட மொழிக்குடும்பம்

தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும். மனிதர்கள் முதலில் தம் எண்ணங்களை **மெய்ப்பாடுகள், சைகைகள், ஒலிகள், ஓவியங்கள்** முதலியவற்றின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றனர். இவற்றின் மூலம் **பருப்பொருள்களை** மட்டுமே ஓரளவு உணர்த்த முடிந்தது. **நுண்பொருள்களை** உணர்த்த இயலவில்லை. அதனால், ஒலிகளை உண்டாக்கிப் பயன்படுத்தத் தொடங்கினர். சைகையோடு சேர்ந்து **பொருள் உணர்த்திய ஒலி**, காலப்போக்கில் தனியாகப் பொருள் உணர்த்தும் வலிமைபெற்று மொழியாக வளர்ந்தது.

மனித இனம் வாழ்ந்த **இட அமைப்பும் இயற்கை அமைப்பும்** வேறுபட்ட ஒலிப்பு முயற்சிகளை உருவாக்கத் தூண்டின. இதனால் பல மொழிகள் உருவாயின. உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் அவற்றின் பிறப்பு, தொடர்பு, அமைப்பு, உறவு ஆகியவற்றின் அடிப்படையில் **மொழிக்குடும்பங்கள்** பலவாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

மொழிகளின் காட்சிச் சாலை

இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 1300 க்கும் மேற்பட்டது. இவற்றை **நான்கு** மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கின்றனர். அவையாவன;

1. இந்தோ – ஆசிய மொழிகள்
2. திராவிட மொழிகள்
3. ஆஸ்திரோ ஆசிய மொழிகள்
4. சீன – திபெத்திய மொழிகள்

TEACHER'S CARE ACADEMY

என அழைக்கப்படுகின்றன. பல கிளை மொழிகளும் இங்குப் பேசப்படுவதால் இந்திய நாடு **மொழிகளின் காட்சிச் சாலையாகத்** திகழ்கிறது என்று ச.அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் குறிப்பிடத்தக்க பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று. **மொகஞ்சதாரோ – ஹரப்பா** அகழாய்வுக்குப் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் **திராவிட நாகரிகம்** என்று அறிஞர்கள் கருதுகின்றனர். திராவிடர் பேசிய மொழியே **திராவிட மொழி** எனப்படுகிறது. **திராவிடம்** என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர் **குமரிலப்பட்டர்.** தமிழ் என்ற சொல்லிலிருந்துதான் **திராவிடா** என்ற சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். **ஹீராஸ் பாதிரியார்** என்பார் இம்மாற்றத்தைத்

தமிழ் – தமிழா – தமிலா – டிரமிலா – ட்ரமிலா – த்ராவிடா – திராவிடா

என்று விளக்குகின்றனர்.

மொழி ஆய்வு

திராவிட மொழிக்குடும்பம் என்ற பகுப்பு உருவாவதற்கு ஒரு வரலாறு இருக்கிறது. தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் சமஸ்கிருத மொழியிலிருந்து உருவானவை என்ற கருத்து அறிஞர் பலரிடையே நிலவி வந்தது. இம்மொழிகளில் வடமொழிச் சொற்கள் மிகுந்து காணப்பட்டதால் 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை இந்திய மொழிகள் அனைத்திற்கும் வடமொழியே மூலம் எனவும் அதிலிருந்தே மற்ற மொழிகள் தோன்றி வளர்ந்தன எனவும் அறிஞர்கள் கருதினர். **அறிஞர் வில்லியம் ஜோன்ஸ்** என்பார் வடமொழியை ஆராய்ந்து மற்ற ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது வடமொழி என முதன்முதலில் குறிப்பிட்டார். தொடர்ந்து **1816-**ஆம் ஆண்டில் பேராசிரியர்கள் **பாப், ராஸ்க், கிரிம்** முதலானோராலும் மொழி சார்ந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

முதன் முதலில் **பிரான்சில் எல்லிஸ்** என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார். இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதித் **தென்னிந்திய மொழிகள்** எனவும் பெயரிட்டார். இதனையொட்டி, **மால்தோ, தோடா, கோண்டி** முதலான மொழிகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஹோக்கன் என்பார் இம்மொழிகள்

TEACHER'S CARE ACADEMY

அனைத்தையும் இணைத்துத் தமிழியன் என்று பெயரிட்டதோடு ஆரிய மொழிகளிலிருந்து இவை மாறுபட்டவை என்றும் கருதினார். **மாக்ஸ் முல்லரும்** இதே கருத்தைக் கொண்டிருந்தார்.

1856 – இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் **கால்டுவெல்,** திராவிட மொழிகள், ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுப்பட்டவை எனவும் இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்கு செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார். இதனை மேலும் உறுதிப்படுத்தப் பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி, திராவிட மொழிகளுக்குள் இருக்கும் ஒற்றுமைகளையும் எடுத்துரைத்தார்.

கால்டுவெல்லுக்குப் பின்னர் **ஸ்டென்கனோ, கே.வி.சுப்பையா, எல்.வி.இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில், ஆந்திரனோவ், தெ.பொ.மீனாட்சிசுந்தரம்** முதலான அறிஞர்கள் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

திராவிட மொழிக்குடும்பம்

திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் **தென் திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள்** என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. திராவிட மொழிக் குடும்பத்தில் உள்ள **தமிழ், கன்னடம், மலையாளம்** முதலானவை தென்திராவிட மொழிகள் எனவும்; தெலுங்கு முதலான சில மொழிகள் நடுத்திராவிட மொழிகள் எனவும்; பிராகுயி முதலானவை வட திராவிட மொழிகள் எனவும் பகுக்கப்பட்டுள்ளன.

தென் திராவிடம்	நடுத்திராவிடம்	வடதிராவிடம்
தமிழ்	தெலுங்கு	குரூக்
மலையாளம்	கூயி	மால்தோ
கன்னடம்	கூவி (குவி)	பிராகுய் (பிராகுயி)
குடகு (கொடகு)	கோண்டா	
துளு	கோலாமி (கொலாமி)	
கோத்தா	நாய்க்கி	
தோடா	பெங்கோ	
கொரகா	மண்டா	
இருளா	பர்ஜி	
	கதபா	
	கோண்டி	
	கோயா	

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 1 (தொகுதி – 2)

COMPETITIVE EXAM
FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

PG TRB HISTORY 2020 - 21

UNIT I (VOLUME-II)

உள்ளடக்கம்

- மொழியியல் ஆராயச்சியின் தோற்றம்
- மொழி அமைப்பும் வரலாறும்
- தொடரியல் ஆராய்ச்சி
- மொழி வரலாற்றுச் சான்றுகள்
- மொழியின் தோற்றம்
- மொழிக்குடும்பங்கள்
- இந்திய மொழிக் குடும்பங்கள்
- இந்திய மொழிகளின் வரலாறு

ஆய்வு நூல்கள்:

- திராவிட மொழிகளின் ஒப்பாய்வு ஓர் அறிமுகம் - டாக்டர். ஜி.சாமுவேல்
- தமிழ்மொழியின் வரலாறு - பரிதிமாற்கலைஞர்
- கால்டுவெல் ஒப்பிலக்கணம் - ராபர்ட் கால்டுவெல்
- திராவிட மொழிகளின் ஒப்பீடாய்வு - டாக்டர் தங்க.மணியன்
- மொழிநூல் - டாக்டர் மு. வரதராசன்
- மொழிவரலாறு - டாக்டர் மு. வரதராசன்
- கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்(தமிழில்)

  - புலவர்.க.கோவிந்தன், க.இரத்தினம்

- மொழியியல் - டாக்டர்.எஸ்.ஆரோக்கியநாதன்
- தமிழ்மொழி இலக்கண இயல்புகள் - பேராசிரியர்.அ.சண்முகதாஸ்
- மொழிநூற் கொள்கையும், தமிழ்மொழி அமைப்பும் - கா.சுப்பிரமணியம்பிள்ளை
- மொழியியல் - முனைவர்.கி.கருணாகரன், முனைவர்.வ.ஜெயா
- ஒலியனியல் - மொழியியல்,தேசியகல்வி நிறுவனம்,மகரகம்
- இக்காலமொழியியல் - டாக்டர்.முத்துசண்முகம்
- உலகமொழிகள் - டாக்டர்.ரா.சீனிவாசன்
- பண்டைத் தமிழ் எழுத்துக்கள் - தி.நா.சுப்பிரமணியன்
- மொழிநூல் - கார்த்திகேசு முதலியார்
- தமிழ் வரலாற்று இலக்கணம் - பேராசிரியர்.ஆ.வேலுப்பிள்ளை
- தமிழ்மொழி வரலாறு - டாக்டர்.சு.சக்திவேல்
- தமிழ்மொழி வரலாறு - டாக்டர்.தெ.பொ.மீனாட்சிசுந்தரம்
- பழந்தமிழும் கிளைமொழிகளும் - முனைவர் கலைவாணி
- இக்காலமொழியியல் - டாக்டர்.முத்து சண்முகம்
- இலக்கண ஆய்வுக்கட்டுரைகள் பதிப்பு - ச. அகஸ்தியலிங்கம்
- திராவிட மொழிகள் - டாக்டர். ச. அகஸ்தியலிங்கம்
- ஒப்பியல் இலக்கணம் - பேராசிரியர்.க.கைலாசபதி
- இக்கால தமிழ்இலக்கணம் - சிவ.கோதண்டராமன்
- கிளை மொழியியல் - கோ.சீனிவாசசர்மா
- எழுத்திலக்கணக்கோட்பாடு - செ.வை.சண்முகம்
- சொல்லிணக்கணக்கோட்பாடு - செ.வை.சண்முகம்
- எழுத்தியல் - சூ.இன்னாசி
- சொல்லியல் - சூ.இன்னாசி

மொழியியல் ஆராயச்சியின் தோற்றம்

மொழி ஆராய்ச்சியில் இந்திய நாடும் பண்டைக் கிரேக்கம் முதன்மை பெற்று நின்றது என்று கூறலாம். தொல்காப்பியமும் **பாணினயமும் விளக்க மொழியியல்** அடிப்படையில் அமைந்த பழமையான இலக்கணங்களாகும். இவ்விலக்கண ஆசிரியர்கள் மொழியின் அமைப்பை ஒலியனியல், உருபனியல் என்ற நிலையில் ஆராய்ந்தனர். இக்கால **விளக்க மொழியியலின் தந்தை புளும்ஃபீல்டு** அவர்கள் பாணினியைக்

TEACHER'S CARE ACADEMY

கற்றதனாலேயே விளக்க மொழியில் மொழி ஆராய்ச்சி நூலாக நமக்குக் கிடைப்பனவற்றில் காலத்தால் மிகவும் முந்தியது. **'நிருக்தா' (Nirukta)** என்ற நூலாகும். இந்நூல் கி.மு. நான்காம் நுற்றாண்டைச் சார்ந்தது. இதனை அடுத்து எழுந்த பாணினியின் **'அஷ்டாத்தியாயி'** என்ற நூல் மொழியில் அரங்கில் பெருமை பெற்ற நூலாகும். நாலாயிரம் சூத்திரங்களைக் கொண்ட இன்நூல் சமஸ்கிருத மொளியின் அமைப்புகளையும் மொழியியல் கூறுகளையும் விரிவாக விளக்குகிறது. கி.பி. 7 ஆம் நூற்றாண்டில். எழுந்த கச்சாயனரால் எழுதப்பட்ட இலக்கண நூலும் இங்குக் குறிப்பிடக்கது.

திராவிட மொழிகளில் காணப்படும் மிகவும் பழமையான நூல்களுள் முதன்மையானது தொல்காப்பியம் உலக மொழிகளில் காணப்படும் முதல் நூல்களை ஆராயின் தொல்காப்பியத்தில் காணப்படும் அமைப்பு, வேறு எந்த உலக மொழி இலக்கணத்திலும் காணப்படும் அமைப்புக்கு குறைந்ததல்ல என்பது தெளிவாகும். இந்திய இலக்கண அறிஞர்கள் சொற்களின் அமைப்பு முறையிலும் ஆக்க முறையிலும் கவனம் செலுத்த, கிரேக்க அறிஞர்கள் தத்துவ அடிப்படையில் மொழியை ஆராய்ந்தனர். **லேகாஸ்** என்ற நுலை இயற்றிய ஹெராகிளிட்டஸ் என்பவரும் டெமாகிரிட்டஸ் என்பவரும் இந்நிலையிலே மொழி பற்றி ஆராய்ந்தனர்.

கிரேக்கம்:

பிளாட்டோ போன்றவர்கள் மொழியை ஆராய்ந்தவர்களுள் முதன்மையானவர்கள் இவர்களது ஆராய்ச்சியில் பொருளுக்கும் பெயருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கருதப்பட்டது. **அரிஸ்டாட்டில்** என்பார் மொழியானது மரபாலும் உடன்பாட்டாலும் தோன்றியது என நம்பினர். இன்றைய மொழியியலாளர் இக்கொள்கையை ஆதரிக்கின்றனர், கிரேக்க நாடு **அரிஸ்டார்க்கஸ்(Aristarchos) மல்லோஸ், கிரிசிப்போஸ்** போன்ற இலக்கண அறிஞர்களைத் தந்துள்ளது. இவர்களது நூல்கள் அனைத்தும் இலக்கண வளர்ச்சிக்குத் துணையாக அமைந்தன. **டைஸ்கோலஸ்(Dyskolos)** போன்றவர்கள் பேச்சுமொழிப் பற்றியும் தொடரியல் பற்றியும் எழுதினர். அரிஸ்டாட்டிலுக்குப் பின்வந்த கிரேக்க இலக்கண ஆசிரியர்களும் மிகச்சிறந்தவராகக் கருதப்படுவர் **டயோனிசியஸ் திரேக்ஸ்(Dionysius Thrax)** சொல்வகை(Parts of speech) என இலக்கண ஆசிரியர்கள் பலர் செய்யும் ஆய்வுக்கு பகுப்புக்கும் இவர் நூலே அடிப்படையாகும், இவரது நூலே மேனாட்டில் சிறந்த இலக்கண நூலாகக் கருதப்படுகின்றது.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

UNIT I

QUESTIONS

1. தமிழ்மொழியின் இயல்பு

A) தனிநிலை B) முன்னொட்டு நிலை

C) பின்னொட்டு நிலை D) உட்பிணைப்பு நிலை

2. இக்கால விளக்க மொழியியலின் தந்தை

A) சோமஸ்கி B) புளூம்பீல்ட்

C) நைடா D) ஹாரிஸ்

3. இந்தி, குசராத்தி, மராட்டி ஆகிய மொழிகளின் இனம்

A) திராவிட இனம் B) செமிட்டிக் இனம்

C) மங்கோலிய இனம் D) இந்தோ - ஐரோப்பிய இனம்

4. பிராகூய் என்பது

A) தென் திராவிட மொழி B) வட திராவிட மொழி

C) மத்திய திராவிடமொழி D) திராவிட மொழி அன்று

5. ஒருமை பன்மை என்பகுப்பு கொண்ட மொழி

A) தமிழ் மொழி B) தெலுங்கு மொழி

C) இந்தி மொழி D) சமற்கிருதம்

6. உலக மொழிகளுள் வழங்கும் செம்மொழியாகத் திகழ்வது

A) சமற்கிருதம் B) கிரேக்கம்

C) தமிழ் D) எபிரேயம்

7. “என்றும் உள தென்றமிழ்” எனத் தமிழன் தொன்மையினைப் புகழ்ந்தவர்

A) இளங்கோ

B) சேக்கிழார்

C) பாரதிதாசன்

D) கம்பர்

8. " ஒரு சொல்லின் பொருளை உணர்த்த வேறுபல சொற்கள் வடமொழியில் இருக்கத் திராவிட மொழியில் ஒரு சொல் மட்டும் அப்பொருளை உணர்த்தியிருப்பின் அது திராவிடச் சொல்லே " எனக் கூறியவர்

A) எல்லில்

B) வீரமாமுனிவர்

C) போப்பையர்

D) கால்டுவெல்

9. சொல்வகை (Parts of Speech) என மேனாட்டு இலக்கணிகள் செய்யும் ஆய்வுக்கும் பகுப்புக்கும் அடிப்படையான நூலின் ஆசிரியர்

A) டயோனிசியஸ் திரேக்ஸ்

B) வர்ரோ

C) அரிஸ்டாடில்

D) பிரிஸியன்

10.பின்லாண்டு முதல் ரசிய வரையிலுள்ள நாடுகளில் பேசப்படும் மொழிகள்

A) செமிட்டிக் இனம்

B) அன்னாமியினம்

C) ஆரிய இனம்

D) சித்திக் இனம்

TEACHER'S CARE ACADEMY

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

தமிழ்

PG TRB
2020-2021

UNIT-2

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 2 (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்
12 ஆம் வகுப்பு வரை
உள்ள பொதுத் தமிழ்
மற்றும்
சிறப்புத் தமிழ் (+1)
சிறப்புத் தமிழ் (+2)

COMPETITIVE EXAM
FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

PG TRB HISTORY 2020 - 21

UNIT – II (VOLUME-I)

தொடரியல்

சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தருவது தொடர். தொடரமைப்பு. அதன் பயன்பாடு ஆகியவற்றை ஆராய்வது தொடரியல். தொடரியலின் சிறப்பு. ஒரு மொழியின் வளத்தைக் காண உதவுகிறது. ஒரு மொழியில் சொற்களும் அவற்றின் பொருள்களும் காலந்தோறும் சிறிது வேறுபடக் காணலாம். ஆனால், சொற்றொடர் அமைப்பில் பெரும் மாறுதல் ஏற்படுவதில்லை. அவ்வாறு மாறுதல் ஏற்படினும், அம்மொழியின் அடிப்படை இயல்புக்கு மாறாக அமைவதில்லை. ஆதலால், சொற்றொடர் அமைப்பு ஒன்றே அம்மொழியின் தனிச்சிறப்புகளை உணர்த்த வல்லதாய் உள்ளது.

தொல்காப்பியம் காட்டும் தொடரமைப்புகள்

நாம் பிறரிடம் பேசும்போது, தொடர்களாகத்தான் பேசுகிறோம். நாம் பயன்படுத்தும் தொடர்களில் இயல்பாகவே இலக்கணக்கூறுகள் அமைந்துள்ளன. அவற்றைத் தொல்காப்பியம் சில நூற்பாக்களில் சுட்டிக்காட்டியுள்ளது. அத்தகைய தொடரமைப்புகள். பின்வரும் தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை விளக்குவதற்கான எடுத்துக்காட்டுகள். இலக்கியத்திலிருந்தும் நடைமுறை வழக்கிலிருந்தும் எடுத்தாளப்பட்டுள்ளன.

தொடரில் சொற்கள் அமைந்துவரும் நிலை

- திணை – பால்- எண் – தொடர்ப்பொருத்தம்
- ஒரு சொல் அல்லது தொடர் அடுக்கி வருதல்.
- ஒரு தொடரை அடிப்படையாக கொண்டு செருகலும் விரித்தலும்.
- தொடரில் முன் பின் மாற்றம்
- ஒரு தொடரை இரு வகையாக விளக்குதல்
- இலக்கணக்கூறு நோக்கில் மாற்றம் – தோன்றா எழுவாய்.
- தொடரமைப்பில் ஆகுபெயர்

தொடரில் சொற்கள் அமைந்துவரும் நிலை

கண்ணன் வந்தான், அவன் கடிதம் கொண்டு வந்தான்..

இங்குக் **கண்ணன் என்பது. இயற்பெயா, அவன் என்பது சுட்டுப்பெயர்**, இவ்வாறு இயற்பெயரையுடைய ஒரு தொடரும், அதற்குரிய சுட்டுப்பெயரையுடைய மற்றொரு தொடரும் வரும்போது, அவை, அடுத்தடுத்து வருதல் வேண்டுமெனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

திணை பால் – எண் – தொடர்ப்பொருத்தம்.

ஒரு தொடரிலுள்ள எழுவாய், அதன் பயனிலையோடு திணை, பால், எண் ஆகியவற்றில் ஒத்திருத்தல் வேண்டும். அவ்வாறு வருவது, **தொடர்ப் பொருத்தம்** ஆகும். இதனைக் கீழ்க்காணும் பட்டியல் வழிப் புரிந்துபொள்ளலாம்.

தொடர்கள்	திணை	பால்	எண்
மாறன் சிரித்தான்	உயர்திணை	ஆண்பால்	ஒருமை
மணிமொழி பாடினாள்	உயர்திணை	பெண்பால்	ஒருமை
மக்கள் மகிழ்ந்தனர்	உயர்திணை	பலர்பால்	பன்மை
மான் துள்ளியோடியது	அஃறிணை	ஒன்றன்பால்	ஒருமை
மலர்கள் மலர்ந்தன	அஃறிணை	பலவின்பால்	பன்மை

மேற்கண்ட தொடர்களில், எழுவாய்ப் பெயரின் திணை – பால், வினைமுற்றின் திணை – பால் ஆகியன ஒத்திருக்கின்றன. இவைபோன்று தொடர்கள் அமைதல் வேண்டும். தம் மரபில் மயங்கி வருதல் கூடாது இதனை,

TEACHER'S CARE ACADEMY

> "வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
>
> பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
>
> மயங்கல் கூடா தம்மர பினவே"
>
> \- **தொல்.சொல்.கிளவி** 11

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

சில தொடர்களில், இருதிணைக்குரிய எழுவாய் விரவி வரும்போது. அத்தொடருக்குரிய பயனிலை எத்திணைக்குரிய முடிவு பெறும் என்பதில் தடுமாற்றம் ஏற்படலாம். கீழ்க்காணும் தொடரைக் காணுங்கள் சரியான வினைமுற்றைத் தேர்ந்தெடுங்கள்.

மன்னனும் நால்வகைப் படைகளும் விரைவாக முன்னேறிச் ----- (சென்றார்கள் / சென்றன)

விடை காண முடிந்த்தா? இத்தொடரில், உயர்திணை எழுவாயும் அஃறிணை எழுவாயும் கலந்து வந்து ஒரு முடிவினைக் கொள்ளும்போது அவை சிறப்பை நோக்கினால் உயர்திணையிலும், இழிவை நோக்கினால் அஃறிணையிலும் முடியும். ஆகவே இத்தொடர் சிறப்பு நோக்கி மன்ன்னும் நால்வகைப் படைகளும் விரைவாக முன்னேறிச் சென்றார்கள் என உயர்திணை முடிவு பெறும். மேலும் சில தொடர்கள்.

- **மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா,** (இழிவு நோக்கி அஃறிணை முடிபு)
- **இடையனும் ஆடுகளும் மாடுகளும் கோழிகளும் சென்றன.** (அஃறிணை எழுவாய் மிகுதி)
- **ஆசிரியர்கள், மாணாக்கர்கள், கல்வி அலுவலர், தலைமையாசிரியர், நூல்கள் இப்பள்ளியில் இருக்கிறார்கள்** (உயர்திணை எழுவாய் மிகுதி)

எனவேதான், திணை – பால் – எண் ஆகியவற்றிற்கேற்பத் தொடர்ப் பொருத்தம் அமைவது மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

வழுநிலை

ஒரு தொடரில் திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று மாறுபட்டு, முன்நின்ற சொல்லுக்கு ஏற்றவாறு அமையாமல் இலக்கணக் குற்றம் தோன்ற வருவது வழுநிலை, வினா, விடை, மரபு ஆகியன இடம்பெறும் தொடரிலும் வழு தோன்றும், எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி ஆகியன இடம்பெறும் தொடரில் வழு வருமிடங்களும் உள்ளன.

வழு – குற்றம் - பிழை

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 2 (தொகுதி – 2)



COMPETITIVE EXAM FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

PG TRB HISTORY 2020 - 21

UNIT – II (VOLUME-II)

உள்ளடக்கம்:

- சொற்றொடர் அமைப்பு
- சொற்பொருள் மாற்றம்
- மரபு இலக்கணங்களும் தொடரியலும்
- மாற்றிலக்கணம்
- தொடரமைப்புப் பகுதி
- பேச்சு மொழியும், எழுத்து மொழியும்
- தமிழில் பிறமொழிக் கலப்பு வரலாறு
- வடமொழி
- முண்டாமொழி
- இந்தி, மராத்தி, தெலுங்கு
- மேலை நாட்டு மொழிகள்
- பிறமொழிகளில் தமிழ்
- கலைச் சொல்லாக்கம்
- காலந்தோறும் தமிழ்

TEACHER'S CARE ACADEMY

சொற்றொடர் அமைப்பு

சொற்றொடர் உறுப்பு :

ஒவ்வொரு வாக்கியத்திலும் பொதுவாக எழுவாய் , பயனிலை , செயப்படுபொருள் என்னும் மூன்று உறுப்புகள் உள்ளன . இவற்றுள் எழுவாயும் , பயனிலையும் இன்றியமையாதவை . செயப்படுபொருள் இல்லாமல் கூட வாக்கியங்கள் அமையக்கூடும்

எழுவாய் :

வாக்கியத்தில் எந்தப்பொருள் அல்லது கருத்துப் பற்றிப் பேசப்படுகிறதோ , அந்தப்பொருளை அல்லது கருத்தைக் குறிக்கும் சொல் " எழுவாய் " எனப்படும் . 'காற்று வீசியது' என்னும் தொடரில் காற்று என்பது எழுவாய் . வீசியது எது ? ' காற்று எனவே இத்தெடார் காற்றைப் பற்றியே பேசுகிறது . எனவே காற்று என்பது எழுவாய் . பயனிலையோடு எது அல்லது யார் ? என்னும் வினாவைச் சேர்த்தால் என்ன விடை வருகிறதோ அதனை எழுவாய் எனக் கண்டு கொள்ளலாம்

தோன்றா எழுவாய் :

"மாணவன் நூலைப் படித்தான் " என்னும் வாக்கியத்தில் மாணவன் எழுவாய். படித்தான் பயனிலை . நூலை என்பது செயப்படுபொருள் . சில வாக்கியங்களில் செயப்படுபொருள் வராமலும் இருக்கலாம் . எழுவாய் சில வாக்கியங்களில் மறைந்து வருவதும் உண்டு . அதனைத் தோன்றா எழுவாய் என்பா . நூலைப்படி என்னும் இவ்வாக்கியத்தில் நீ என்னும் சொல் இல்லை . கருத்து மட்டும் உணர்த்தப்படுகிறது . தோன்றா எழுவாய் என விளக்குகின்றனர்.

திட்டமற்ற எழுவாய் :

உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யலாமா ? என்பது ஒரு வினா . இதில் (ஒருவன்) உண்டு வீட்டுக்கு இரண்டகம் செய்யலாமா ? என்னும் பொழுதுதான் வாக்கிய இலக்கணம் நிறைவடைகிறது . இவ்வாறு வாக்கியத்தின் பயனிலை அதாவது வினைமுற்றில் கூறியுள்ள செயலைச் செய்தவர் , இன்னார் என வெளிப்படக் கூறாமல் , எல்லாருக்கும் பொருந்துமாறு ஒரு பொதுத்தன்மையுடன் சில வாக்கியங்கள் அமைகின்றன . இவ்வாறு பொதுவாக வருவதற்கு "ஒருவன்" “ஒருத்தி". "நீ"," அவள்"," அவள்" என ஏதேனும் ஓர் எழுவாயை அமைத்துக் கொண்டால்தான் வாக்கிய இலக்கணம் நிறைவு பெறும் . இவ்வாறு திட்டமின்றிப் பல எழுவாய்கள் பொருந்துமாறு அமைந்தால் , அவற்றைத் திட்டமற்ற எழுவாய் என்று கூறுவர்.

பயனிலை :

பொருளைப் பற்றி , அஃதாவது எழுவாயைப் பற்றி ஏதேனும் ஒரு செய்தி (செயல்பாடு) வாக்கியத்தில் இடம்பெற்று இருக்கும். அச்செய்தி அல்லது செயல்பாட்டைக் குறிக்கும் சொல்லே”பயனிலை” ஆகும்.

TEACHER'S CARE ACADEMY

செயப்படுபொருள் :

வாக்கியத்தில் எழுவாய், பயனிலைபோலச் செயப்படுபொருள் என்னும் ஓர் உறுப்பு உண்டு . அது பயனிலையில் கூறப்பட்டுள்ள வினையின் பயனை அடைவதாக இருக்கும். எழுவாயினால் செய்யப்படுகின்ற வினையின் பயனை அடைகின்ற பொருள் ஆகையால் செயப்படுபொருள். என அழைக்கப்படுகின்றது. புயனிலைக்கு முன்னர் எதை? என்னும் வினாவைச் சேர்த்தால் , எது விடையாக வருகிறதோ? அதுவே வாக்கியத்தின் செயப்படுபொருள்.

பெயரும் பெயரைத் தழுவி நிற்கும் அடைமொழிக்கும் பெயர் நிலைத் தொடர் எனப்படும். வினையும் வினையைத் தழுவி நிற்கும் அடைமொழிக்கும் வினைநிலைத் தொடர் எனப்படும்.

வாக்கியம்

(Sentence)



TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018

B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 Salem: 93602 68118

UNIT II

QUESTIONS

1. கிழக்கு, மேற்கு என்னும் திசைப்பெயர்கள் இடம்பெறாத இலக்கியம்

A) சங்கமருவிய கால இலக்கியம்

B) பல்லவர் கால இலக்கியம்

C) சங்கக்கால இலக்கியம்

D) பிற்காலச் சோழர்கால இலக்கியம்

2. “செய்யாதி” என்னும் ஏவல் வினை ________________

A) சங்கம் மருவிய காலத் தமிழுக்குரியது

B) சங்ககாலத்தமிழ்க்குரியது

C) பல்லவர் காலத்தது

D) பிற்கால சோழர் காலத்தது

3. கண், மன் என்னும் புதிய ஆண்பால் விகுதிகளைக் குறிப்பிடும் நூல்

A) வீரசோழியம்

B) நன்னூல்

C) இலக்கண விளக்கம்

D) அவிநயம்

4.எது சரி ?

A) பேச்சு மொழியின் தொடர் சுருங்கியது, எளியது, நேரானது

B) பேச்சு மொழியின் தொடர் நீண்டது, அரியது, நேரானது

C) பேச்சு மொழியின் தொடர் நீண்டது எளியது, நேரானது

D) பேச்சு மொழியின் தொடர் சிக்கலானது, எளியது, சுருங்கியது

5. யெஸ்பர்சன் கருத்துப்படி பிறமொழியிலிருந்து சொற்களைக் கடன் வாங்கக் காரணம்

A) தம்மிடம் இல்லாத புதிய பொருள்களைச் சுட்டல்

B) சோம்பலின்மை

C) தம் செல்வாக்கு

D) சோம்பலின்மையும் செல்வாக்கும்

6. வேறு, இல்லை உண்டு ஆகியவை பொதுவினை என முதன் முதலில் கூறியவர்

A) தொல்காப்பியர்

B) பவணந்தி முனிவர்

C) புத்தமித்திரர்

D) வைத்தியநாத தேசிகர்

7. களிப்பு, மகிழ்ச்சி - இவற்றின் தற்போதைய நிலை

A) இழி பொருட்பேறு

B) உயர் பொருட்பேறு

C) நுண்பொருட்பேறு

D) பருப்பொருட்பேறு

8. தொடரியல் ஆராய்ச்சி வரலாற்றின் மூன்று நிலைகள்

A) மரபிலக்கணம், அமைப்பு மொழியியல், பொருளியல்

B) மரபிலக்கணம், அமைப்பு மொழியியல், மாற்றிலக்கணம்

C) உருவாக்குப் பொருளியல், மாற்றிலக்கணம், மரபிலக்கணம்

D) மரபிலக்கணம், மாற்றிலக்கணம், உருவாக்குப் பொருளியல்

9. எது சரி?

A) பேச்சுமொழி அறிவால் அமைவது; எழுத்துமொழி உணர்ச்சியால் உருவாவது

B) பேச்சுமொழி உணர்ச்சியால் உருவாவது: எழுத்துமொழி அறிவால் அமைவது

C) பேச்சுமொழி உணர்ச்சியால் உருவாவது, எழுத்துமொழி உணர்ச்சி யாலும் அறிவாலும், அமைவது

D) இருவகை மொழியும் மேற்கூறிய இரண்டாலும் உருவாவதில்லை.

10. பேச்சுமொழியில் சிலகால் சொற்கள் மாறி மாறி அமைதல் உண்டு. காரணம்

A) அறிவு

B) அறியாமை

C) உணர்ச்சி

D) குழப்பம்

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

PG TRB 2020-2021

தமிழ்

UNIT-3

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 3 (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்
12 ஆம் வகுப்பு வரை
உள்ள பொதுத் தமிழ்
மற்றும்
சிறப்புத் தமிழ் (+1)
சிறப்புத் தமிழ் (+2)

COMPETITIVE EXAM
FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018

B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 Salem: 93602 68118

PG TRB HISTORY 2020 - 21

UNIT – III (VOLUME-I)

இலக்கண வரலாறு

இலக்கணத்தின் இன்றியமையாமை

ஒரு மொழிக்கு ஒழுங்கையும் சீர்மையையும் தருவது இலக்கணம். அஃது, ஒரு மொழியின் பல்வேறு கூறுகளை எடுத்துரைக்கிறது. மொழியின் இயக்கத்தைப் பல விதிகளாகப் பாகுபடுத்திக்காட்டுகிறது.

இலக்கணம், பழங்காலந்தொட்டே நம் தமிழ்மொழியின் அமைப்பையும் இலக்கிய மரபையும் போற்றிப் பாதுகாத்து வந்துள்ளது. அதுமட்டுமின்றி, காலந்தோறும் மொழியில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கவும் அவற்றை எதிர்கொள்ளவும். செய்வதில் இலக்கணத்தின் பங்கு இன்றியமையாததாக உள்ளது.

நாம், தமிழில் திருத்தமாகப் பேசுவதற்கும் படிப்பதற்கும் பிழையின்றி எழுதுவதற்கும் அதன் இலக்கணத்தை நன்கு கற்றுக்கொள்ளல் வேண்டும். ஆழ்ந்த இலக்கண அறிவு பெற்றிருந்தால்தான், இலக்கியத்தின் பல நுட்பமான கருத்துகளைக் கூர்ந்து, உணர்ந்து சுவைக்க முடியும். ஆகவே, **இலக்கணம்** என்பது, **ஒரு மொழியின் கண்ணாகும்.**

இலக்கண நூல்களின் தோற்றம்

இலக்கியங்களின் எண்ணிக்கை பெருகத் தொடங்கியது, மொழியின் பொதுத்தன்மைகளைத் தொகுத்துப் பிறருக்கு உணர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இலக்கண நூல்எழுத விழைந்தவர்கள், தாம் வாழ்ந்த காலத்திலும் அதற்கு முன்பும் உள்ள **மொழி வழக்கு** அனைத்தையும் அறிந்து, வகைப்படுத்திக்கூற முயற்சி மேற்கொண்டனர். இஃது, இலக்கணத் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

தொல்காப்பியப் பாயிரத்தில், ***முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி*** எனக் கூறப்பட்டுள்ளமையும் நூலினுள் ***என்ப, என்மனார் புலவர், மொழிப, மொழிமனார்*** எனக் குறிப்பிட்டுள்ளமையும் தொல்காப்பியத்திற்கு முன் இலக்கண நூல்கள் இருந்தன என்பதை உறுதி செய்கின்றன.

எனவே, பல நூல்கள் எழுதப்பட்ட பின்னர், ***நூல்களின் பண்பு நுவலும் இலக்கணங்களும்*** எழுதப்பட்டன. இலக்கணத் தோற்றம், இலக்கியத்தை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல், வழக்குமொழியின் வாழ்வையும் வளத்தையும் போற்றுவதாகவும் அமைந்தது, இதனால்தான், தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம்,

> *வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும்*
> *நாடித் தொல்காப்பியம் தொகுக்கப் பெற்றது.*

என எடுத்துரைக்கின்றது. இலக்கியங்கள் தோன்றிய பின்பே இலக்கணங்கள் தோன்றுகின்றன என்பதனை உணர்த்தும்வகையில்,

> *எள்ளினின் றெண்ணெய் எடுபடுவது போல இலக்கியத்*
> *தினின்றும் எடுபடுவது இலக்கணம்*

என்னும் **பழைய வழக்குத்தொடரும்** உள்ளது.

இலக்கண நூல்களின் வளர்ச்சி

தமிழில் இலக்கணநூல்கள் செய்யுள் வடிவத்தையும் உரைநடை வடிவத்தையும் கொண்டுள்ளன. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம், ***செய்யுள் வடிவில்*** இயற்றப்பெற்ற நூல். தொல்காப்பியத்தைப் பின்பற்றிப் பல நூல்கள் செய்யுள் வடிவில் எழுதப்பட்டுள்ளன. அவை, தொல்காப்பியத்தில் அமைந்துள்ள இயல்களை அடியொற்றித் தனித்தனிப் பகுதி இலக்கணநூலாகத் தோன்றியுள்ளன.

தொல்காப்பிய எழுத்து, சொல் ஆகிய அதிகாரங்களை அடிப்படையாகக்கொண்டு, ***நன்னூல், நேமிநாதம்*** ஆகிய இலக்கண நூல்கள் தோன்றின. சொல்லதிகாரம் மட்டும் அமைந்த இலக்கண நூல்கள் ***பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து*** என்பனவாகும்.

பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள இயல்களுள் அகத்திணையியல் சார்ந்து ***இறையனாரகப்பொருள், நம்பியகப்பொருள், களவியல் காரிகை, மாறன் அகப்பொருள்*** முதலிய இலக்கண நூல்கள் தோன்றின.

TEACHER'S CARE ACADEMY

தொல்காப்பியப் புறத்திணையியல் சார்ந்து, ***புறப்பொருள் வெண்பாமாலை, பன்னிரு படலம்*** ஆகிய இலக்கண நூல்கள் தோன்றின. செய்யுளியல் சார்ந்து ***யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை,*** முதலிய யாப்பிலக்கண நூல்களும் உவமவியல் சார்ந்து ***தண்டியலங்காரம், மாறனலங்காரம்*** முதலிய அணியிலக்கண நூல்களும் எழுதப்பட்டன. இவற்றுள் சில இலக்கண நூல்கள், தொல்காப்பிய மரபை மட்டுமல்லாமல், **வடமொழி இலக்கண மரபுகளைத் தமிழுக்குள்** கொண்டு வரவும் முயன்றுள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னர், உரைநடை வடிவில் இலக்கணச் சுருக்க வினாவிடை முதலான நூல்கள் உரைவடிவில் அமைந்தவை. கால்டுவெல்லின் ***'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'*** என்னும் நூல், தமிழின் தனிச்சிறப்புகளைத் தமிழறியாத மேனாட்டினருக்கும் எடுத்துக்காட்டி, விளக்கியுள்ளது.

இனி, இவ்விலக்கண நூல்கள்பற்றித் தனித்தனியாகச் சில குறிப்புகளைப் பின்வருமாறு காணலாம்.

தொல்காப்பியம்

தொல்காப்பியம், ஐந்திலக்கணம் கொண்டு விளங்குகிறது, ***எழுத்து, சொல், பொருள்*** ஆகிய அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயலாகப் பகுக்கப்பட்டுள்ளது. இந்நூல், எழுத்துகளாலும் சொற்களாலும் உருவாக்கப்படும் செய்யுளுக்கும் அதில் இடம்பெறும் பொருளுக்கும் இலக்கண வரையறைகளைத் தந்துள்ளது.

தொல்காப்பியப் பொருளதிகாரம் பழந்தமிழின் நாகரிகத்தையும் அவர்தம் வாழ்வியல் நடைமுறைகளையும் எடுத்தியம்புகிறது. இவ்வதிகாரத்தில்அமைந்துள்ள இயல்களிலிருந்து இயற்கை, சுற்றுப்புறச்சூழல், அக்கால மக்களின் அகவுணர்வுகள், பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளமுடிகிறது. போர் நெறிகள் குறித்த செய்திகளைப் புறப்பொருள் பற்றிய இயலிலும் ***அன்பின் ஐந்திணை*** அவற்றின் ***முதல், கரு, உரிப்பொருள்*** ஆகியவற்றை அகப்பொருள் பற்றிய இயல்களிலும் அறியமுடிகிறது,

இந்நூலுக்கு ***இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர்*** முதலானோர் உரை எழுதியுள்ளனர்.

TEACHER'S CARE ACADEMY

www.tnexamguide.com (98658 35080, 97862 55080, 70398 57059, 93502 60118)

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 3 (தொகுதி – 2)

COMPETITIVE EXAM

FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

PG TRB HISTORY 2020 - 21
UNIT – III (VOLUME-II)

பொருளடக்கம்

- நன்னூல் எழுத்து
- பாயிர நூற்பாக்கள் 55
- ஆசிரியனது வரலாறு
- பாடஞ்சொல்லல் : வரலாறு
- மாணாக்கன் வரலாறு
- பாடங்கேட்டல் வரலாறு
- எழுத்ததிகாரம்
- எழுத்தியல்
- பதவியல்
- உயிரீற்றுப்புணரியல்
- வேற்றுமைப்புணரியல்
- அல்வழிப்புணர்ச்சி
- மெய்யீற்றுப் புணரியல்
- உருபு புணரியல்
- உருபு புணர்ச்சி விதிகள்
- மொழியியலார் கொள்கை
- தொல்காப்பியம் - எழுத்து
- சிறப்புப்பாயிரம்
- மொழிமரபு
- பிறப்பியல்
- புணரியல்
- தொகைமரபு
- உருபியல்
- உயிர் மயங்கியல்

TEACHER'S CARE ACADEMY

நன்னூல் எழுத்து – பவணந்தி முனிவர்

சமயம் : சமண சமயத் துறவி

ஆசிரியர் : சன்மதி முனிவர்

ஊர் : சனகை எனும் சனநாதபுரம்

ஆதரித்தவர் : சீயகங்கன் (மைசூர் பகுதி)

நூலின் வேறுபெயர்கள் : சிற்றதிகாரம், பின்னூல்

உரை செய்தோர்:

1. மயிலைநாதர் : (மயிலாப்பூர்) : கி.பி.14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமணர். இவருரையே முதலுரை.
2. ஆண்டிப்புலவர் : கி.பி.15. ஆசிரிய விருத்தத்தால் உரையெழுதியவர். இவ்வுரை இப்போது கிடைக்கவில்லை.
3. சங்கரநமச்சிவாயர் : கி.பி.17. ஊற்றுமலை சமத்தான புலவர்களில் தலைமைப் புலவர். சுவாமி நாத தேசிகரின் மாணவர். மறுபெயர் : முக்காளலிங்கர்.
4. சிவஞானமுனிவர் (அ) : **'உரை மன்னர்'** எனப்படுபவர். கி.பி.18. புத்தம் புது உரை விருத்தியுரை கண்டவர்.
5. கூழங்கைத்தம்பிரான் : கி.பி.18. **மயிலை நாதர்** உரையைத் தழுவியது.
6. முகவை இராமானுசக் கவிராயர் : கி.பி.19. சோம சுந்தரம் பிள்ளையின் மாணவர்.
7. விசாகப்பெருமாளையர் : கி.பி.19. திருத்தணிகை ஊரினர். எழுதியது காண்டிகை உரை. நூல் - அணி இலக்கணம், யாப்பு இலக்கணம்
8. ஆறுமுக நாவலர் : கி.பி. 1822-1879 யாழ்ப்பாணத்து நல்லூர் திருவாவடுதுறை ஆதினத்தாரால் 'நாவலர்' என்னும் பட்டம் பெற்றவர். சிவஞான முனிவரின் விருத்தியுரையைத் தழுவி எழுந்த காண்டிகையுரை.
9. சடகோப இராமாநுசாச்சாரியார் : காண்டிகையுரை எழுதியுள்ளார். இக்கால முறைப்படி புணர்ச்சி விதி கூறுவது சிறப்பு.
10. சடகோப ராமாச்சாரியார் உரை
11. சே.கிருஷ்ணமாச்சாரியார்
12. கோ.இராமலிங்கத்தம்பிரான்

TEACHER'S CARE ACADEMY

13. சர்.பொன்னம்பல ராமநாதன்

14. கா.நமச்சிவாய முதலியார்

தற்கால உரையாசிரியர்கள்

1. வேதகிரி முதலியார் உரை
2. இராச கோபால் பிள்ளை உரை – 1880-ல் காண்டிகை உரை
3. பவானந்தம் பிள்ளை உரை
4. ஆ.முத்துத் தம்பிப் பிள்ளை – நன்னூல் இலகுவேதம் - 1848இல்
5. ஜி.யு.போப்பையர் 1858-இல் ஆங்கில விளக்கத்துடன்
6. இ.துரையின் ஆங்கில மொழிபெயர்ப்பு – 1878
7. கழக வெளியீடு
8. தமிழண்ணல்
9. புலவர் வடிவேலனார்
10. அறிஞர் எல்.கே.அக்னிபுத்திரன்

பாயிர நூற்பாக்கள் 55

இயல்கள்

நன்னூல் பதிப்புக்களுள் 462 நூற்பாக்கள், 461 நூற்பாக்கள் என இரு வகை நூல்கள் கிடைக்கின்றன. மயிலை நாதர், கூழங்கைத்தம்பிரான் முதலியோர் உரைகளில் 461 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன. சங்கர நமச்சிவாயர் முதலியோர் உரைகளில் 462 நூற்பாக்கள் உள்ளன.

எண்	எழுத்ததிகாரம்	நூற்பா
1	எழுத்தியல்	72
2	பதவியல்	23
3	உயிரீற்றுப்புணரியல்	53
4	மெய்யீற்றுப்புணரியல்	36
5	உருபு புணரியல்	18
		202

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem
Trichy: 76399 67359 Salem: 93602 68118

UNIT III

QUESTIONS

1. வனப்பு என்னும் செய்யுள் உறுப்பு

A) அழகு B) இலக்கிய வகை

C) யாப்பு வகை D) உத்திகள்

2. வேற்றுப்பொருள் வைப்பணி கற்பனைக்கு உரியது?

A) இயைபு கற்பனை B) கருத்து விளக்கக் கற்பனை

C) படைப்புக் கற்பனை D) கற்பனை ஆகாது

3. இலக்கிய வகைகளின் இலக்கணம் கூறுவது

A) பாட்டியல் B) அகராதி

C) நிகண்டு D) யாப்பியல்

3. பத்துவகை அழகுகளுள் ஒன்று

A) சுருங்க சொல்லி விளங்க வைத்தல் B) கூறியது கூறல்

C) குன்றக் கூறல் D) மிகைப்படக் கூறல்

4. கட்டுரை அமைப்பு

A) தொகை, வகை, விரி

B) முகப்பு, உடல், முடிவு

C) விரிவகை நாகை

D) படுந்தின் வீழ்வு ஆற்றொழுக்கு உவளைப்பாய்த்து?

5. தொல்காப்பியம் அரங்கேற்றம் பற்றிக் குறிப்பிடும் நூல்

A) புறநானூறு

B) மதுரைக்காஞ்சி

C) அகநானூறு

D) கலித்தொகை

6. தொல்காப்பியத்தில் கிளவியாக்கம் கூறும் இலக்கணம்

A) சொல்லிலக்கணம்

B) புணர்ச்சி இலக்கணம்

C) தொடரிலக்கணம்

D) பொருள் இலக்கணம்

7. ஒரு பொருட் பன்மொழி, பல்பொருள் ஒரு மொழி என்பவை பற்றித் தொல்காப்பியத்தில் எவ்வியல் பேசுகிறது?

A) பொருளியில்

B) எச்சவியல்

C) இடையியல்

D) உரியியல்

8. இலக்கணம்

A) பேச்சு மொழிக்கு இல்லை, எழுத்து மொழிக்கு உண்டு

B) இருவகை மொழிகட்கும் உருவாகவில்லை

C) இருவகை மொழிக்கும் உண்டு

D) பேச்சு மொழிக்கு உண்டு, எழுத்துமொழிக்கு இல்லை

9. புள்ளி பெறும் உயிர் எழுத்துக்கள் எனத் தொல்காப்பியர் சுட்டுவன

A) அ, இ

B) இ, உ

C) எ, ஒ

D) ஐ, ஔ

10. தமிழ் எனும் சொல் பிறசொற்களோடு புணரும் போது எச்சாரியை பெறும்?

A) அம்

B) அக்கு

C) இக்கு

D) வற்று

.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

தமிழ்

UNIT-4

PG-TRB (2020-2021)

Website : www.tcaexamguide.com
Mobile App : tcaexamguide

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 4 (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்
12 ஆம் வகுப்பு வரை
உள்ள பொதுத் தமிழ்
மற்றும்
சிறப்புத் தமிழ் (+1)
சிறப்புத் தமிழ் (+2)

COMPETITIVE EXAM
FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem
Trichy: 76399 67359 Salem: 93602 68118

PG TRB HISTORY 2020 - 21
UNIT – IV (VOLUME-I)

எழுத்தும், சொல்லும் மொமொழியின் அமைப்பையும், பயன்பாட்டையும் கூறுகின்றன. பொருளிலக்கணம் தமிழர் வாழ்க்கையிலிருந்து பிறந்த இலக்கியத்தின் கொள்கைகள் பற்றிக் கூறுகின்றது.

அகப்பொருள், புறப்பொருள் என்று பொருளிலக்கணம் இருவகைப்படும். தலைவனுக்கும் தலைவிக்கும் இடையில் உள்ள அன்பையும், வாழ்க்கை நிகழ்வுகளையும் கூறுவதே அகப்பொருள். அகம் சார்ந்த அறம், பொருள், வீடு, கல்வி, வீரம்,கொடை, புகழ் முதலியவற்றைப் பற்றிக் கூறுவது புறப்பொருள்.

அகப்பொருள் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும் இலக்கணம் அகத்திணை எனவும், புறப்பொருள் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும் இலக்கணம் புறத்திணை எனவும் அழைக்கப்படுகின்றன.

அகத்திணை

ஐவகை நிலங்களில் வாழும் மக்களின் அன்பு ஒழுக்கத்தை முதல், கரு, உரி என்னும் முப்பொருள்களின் வழி அகப்பொருள் இலக்கணமாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

தொல்காப்பியர் காட்டும் அகத்திணைகள் கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை என ஏழுவகைப்படும்.

வாழ்க்கையில் நிகழ்வுகள் நடைபெறுவதற்கு அடிப்படையாக அமைந்த நிலமும் பொழுதும் முதற்பொருள் ஆகும்

அகப்பாட்டுக்கு உரிய மூன்று பொருள்களுள் முதன்மை வாய்ந்தது உரிப்பொருள் ஆகும். உரிப்பொருள் என்பது அந்தந்தத் திணைக்குரிய ஒழுக்கம். அந்த உரிப்பொருளை உணர்வதற்கு ஒரு பின்னணி தேவைப்படுகிறது. அந்த நிகழ்வு நடக்கிற இடமும் நேரமும் அந்நிகழ்வை மேலும் சிறப்படையச் செய்கின்றன. இடமும் நேரமுமே நிலம், பொழுது என அழைக்கப்படுகிற முதற்பொருள்களாகும். இவ்விரண்டும் இன்றிச் செயல்கள் நடைபெறுவதில்லை.

ஐவகை நிலங்களும் திணைகளும்

❖ குறிஞ்சி – மலையும் மலைச்சார்ந்த இடமும்

– தலைவனும் தலைவியும் உள்ளத்தால் இணைவதே குறிஞ்சித்திணையாகும்.

❖ முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்

– தலைவன் வருகைக்காகக் காத்திருத்தல் முல்லைத் திணையாகும்.

❖ மருதம் – வயலும் வயல் சார்ந்த இடமும்

– தலைவன் தலைவிக்கிடையே ஏற்படும் சிறபிணக்காகிய ஊடல் மருதத்திணையாகும்.

❖ நெய்தல் – கடலும் கடல் சர்ந்த இடமும்

– கடலுக்குச் சென்ற தலைவன் பொழுதோடு திரும்பாததற்குத் தலைவி வருந்தியிருத்தல் நெய்தல் திணையாகும்.

❖ பாலை - சுரமும் சுரம் சார்ந்த இடமும்

– தலைவன், தலைவியை, விட்டுப் பிரிதல் பாலைத்திணையாகும்.

பொழுது என்பது நிகழ்ச்சி நடைபெறும் காலம் ஆகும். காலத்தைத் தமிழர் இரண்டாகப் பிரிப்பர். அவை பெரும்பொழுது, சிறுபொழுது எனப்படும்.

ஒரு கவிதை நிகழ்வை உருவாக்கப் பயன்படும் வாழ்வியல் சார்ந்த பின்னணிப் பொருள்கள் கருப்பொருள்கள் ஆகும். ஒவ்வொரு திணைக்கும் இன்னின்ன கருப்பொருள்கள் அமையலாம் என்பதைத் தொல்காப்பியர் முதலான இலக்கண நூலார்

TEACHER'S CARE ACADEMY

கூறுகின்றனர். அவை தெய்வம், மக்கள், உணவு, விலங்குகள், மரம், பறவை, பண், பறை, தொழில், யாழ், ஊர், நீர், பூ என்பனவாகும். இவை அனைத்தும் திணைக்குத் திணை வேறுபடும்.

புறத்திணை

புறத்திணை என்பது பொது வாழ்க்கை. அகத்திணையை ஏழு பிரிவுகளில் கூறிய தொல்காப்பியர். புறத்திணையையும் ஏழு பிரிவுகளாகக் கூறுகிறார். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய திணைகளாகும்.

புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூல் புறத்திணைகளைப் பன்னிரண்டாக வகைப்படுத்தியுள்ளது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை பெருந்திணை (திணையின் உட்கூறு : துறை)

திணை	விளக்கம்	துறை எண்ணிக்கை
வெட்சி	மன்னரின் ஆணைப்படி – வீரர்கள் பகை நாட்டுப் பசுக்கூட்டங்களைக் கவர்தலும் கவர்ந்தவற்றை மீட்டலும்	பதினான்கு துறைகளை உடையது
வஞ்சி	மண்ணாசைகொண்டு அரசன் போர் தொடுத்தலும் மண்ணாசையுடன் வரும் பகையரசனோடு எதிர்நின்று போரிடுதலும்	பதின்மூன்று துறைகளை உடையது
உழிஞை	பகை மன்னனின் கோட்டையை முற்றுகை இடுதலும் கோட்டையின் உள்ளிருக்கும் வேந்தன் கோட்டையைக் காத்தலும்	எட்டுத்துறைகளை உடையது
தும்பை	தனது வலிமையை நம்பி வந்த மன்னனை, எதிர்த்து வலிமையுடன் போரிடுதல்	பன்னிரண்டு துறைகளை உடையது

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 4 (தொகுதி – 2)

COMPETITIVE EXAM

FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

PG TRB HISTORY 2020 - 21
UNIT – IV (VOLUME-II)

பாடத்திட்டம்
அகம் - புறம் - முதல், கரு, உரிப்பொருள்கள், தொல்காப்பியம் - புறப்பொருள் வெண்பாமாலை- நம்பியகப்பொருள்

அகப்பொருள் விளக்கம் - நாற்கவிராச நம்பி

இலக்கண நூல்களில் அகப்பொருள்

- பொருள் இலக்கணம் தொடர்பாகத் தோன்றிய நூல்கள் பல. அவற்றுள்ளும் அகப்பொருள் பற்றிய நூல்களே மிகுதி. **இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், நம்பியகப்பொருள், களவியல் காரிகை, மாறன் அகப்பொருள்** என்னும் ஐந்து நூல்கள் அகப்பொருள் இலக்கணத்தை மட்டுமே கூறுவன.
- தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் ஆகிய நூல்களில் பிற இலக்கணங்களோடு அகப்பொருள் இலக்கணமும் ஒரு பகுதியாக இடம்பெறுகிறது.
- **தஞ்சைவாணன்கோவை, திருப்பதிக்கோவை** என்ற இரண்டு நூல்களும் முறையே நம்பியகப்பொருள், மாறன் அகப்பொருளுக்கான மேற்கோள் தொகுப்பாக வழங்கி வருகின்றன.

TEACHER'S CARE ACADEMY

அகப்பொருள் இலக்கண நூல்கள் அட்டவணை

எண்	நூலின் பெயர்	ஆசிரியர் பெயர்	காலம்	பகுப்புகள்	நூற்பாக்கள்
1.	தொல்காப்பியம்	தொல்காப்பியர்	கி.மு.3	பொருளதிகாரம் 4 இயல்கள்	214
2.	இறையனார் அகப்பொருள்	இறையனார்	கி.பி.7	களவு, கற்பு	60
3.	தமிழ்நெறி விளக்கம்	ஆசிரியர் பெயர் தெரியவில்லை	கி.பி.9	பொருளியல்	25
4.	வீரசோழியம்	புத்தமித்திரர்	கி.பி.11	பொருட்படலம்	21
5.	நம்பியகப்பொருள்	நாற்கவிராசநம்பி	கி.பி.13	அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல்	252
6.	களவியற்காரிகை	ஆசிரியர் பெயர் தெரியவில்லை	கி.பி.13	அகப்பொருள் தோழியிற்கூட்டம் கற்பொழுக்கம்	23
7.	மாறன் அகப்பொருள்	திருக்குருகைப் பெருமாள்கவிராயர்	கி.பி.16	களவு, கற்பு, வரைவு	16
8.	இலக்கண விளக்கம்	வைத்தியநாத தேசிகர்	கி.பி.17	அகத்திணையியல்	226
9.	தொன்னூல் விளக்கம்	வீரமாமுனிவர்	கி.பி.18	பொருளியல்	58
10.	முத்துவீரியம்	முத்துவீரிய உபாத்தியாயர்	கி.பி.19	அகஒழுக்கஇயல், களவு ஒழுக்க இயல், கற்பு ஒழுக்க இயல்	92
11.	சுவாமிநாதம்	சுவாமி கவிராயர்	கி.பி.19	அகத்திணை மரபு, கைகோள் மரபு	58
12.	அறுவகை இலக்கணம்	வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்	கி.பி.19	பொருளியல் அகப்பொருள்	56

TEACHER'S CARE ACADEMY

அகப்பொருள் விளக்கம்

(நம்பியகப்பொருள்)

- இயல்கள் - 5:

1.	அகத்திணையியல்	**116 நூற்பா**
2.	களவியல்	**54 நூற்பா**
3.	வரைவியல்	**29 நூற்பா**
4.	கற்பியல்	**10 நூற்பா**
5.	ஒழிபியல்	**43 நூற்பா**
		----------------------
		252 நூற்பா

- நூலாசிரியர் நாற்கவிராச நம்பி, **திருப்புளியங்குடி உய்யவந்த தேவனாரின் மகன், இவர் குலசேகர பாண்டியன் காலத்தவர்** என்றும் சமயம் சமணம் என்றும் சிறப்புப் பாயிரம் கூறும். காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டு.
- இந்தப்பாயிரத்தின் வேறொரு பாயிரம் உண்டென்பது சுன்னாகம் **திரு.அ.குமாரசுவாமிபிள்ளை அவர்கள் பதிப்பிலிருந்து பெறப்படுகிறது.**
- உரையாசிரியர் விவரம் அறியப்படவில்லை எனினும், இவர் எல்லா அகப்பொருள் துறைகளுக்கும் **தஞ்சைவாணன்கோவை (பொய்யாமொழிப்புலவர்) செய்யுட்கள் பலவற்றையும் சங்கப் பாட்டுக்கள் பலவற்றையும் மேற்கோளாகக் காட்டுகிறார்.**

உரை: 1. கா.ர.கோவிந்தராச முதலியார்

2. வ.த.இராமசுப்பிரமணியம்

1.அகத்திணையியல்

கைக்கிளை, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், பெருந்திணை என ஏழுவகை.

அகப்பொருள் கூறும் முறை – 2.

1. புனைந்துரை
2. உலகியல்

அகப்பொருள் வகை: 7

அகப்பொருள் வகை விளக்கம் - 3

1.கைக்கிளை

இது ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை எனவிருவகை (கை-பக்கம்) ஒரு மருங்கும் கேண்மை என்பர்.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem
Trichy: 76399 67359 Salem: 93602 68118

UNIT IV

QUESTIONS

1. "பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும் தண்டுறை ஊரன்" இவ்வடிகளில் நீலமலராகக் குறிப்பிடுதல்-------

A) தலைவியை

B) தோழியை

C) பரத்தையை

D) தலைவனை

2. ஏறிய மடற்றிறம் எத்திணைக்குரியது?

A) கைக்கிளை

B) பெருந்திணை

C) குறிஞ்சித்திணை

D) பாலைத்திணை

3. ஊரொடு தோற்றமும் உரித்தென் மொழிப என்னும் தொல்காப்பிய நூற்பா எவ்வகைச் சிற்றிலக்கியத்திற்கு அடிப்படை?

A) உலா

B) குறவஞ்சி

C) தூது

D) பரணி

TEACHER'S CARE ACADEMY

4. எயில் காத்தல் -------

A) உழிஞைத்திணை

B) நொச்சித்திணை

C) வாகைத்திணை

D) தும்பைத்திணை

5. திணை மயக்கம் ----------

A) முல்லைத் திணையில் தாமரை

B) மருதத்திணையில் ஆற்றுநீர்

C) பாலைத்திணையில் வற்றல் மரம்

D) குறிஞ்சித்திணையில் வேங்கை

6. பாலைத்திணைக்குரிய புறத்திணை --------

A) நொச்சி
B) காஞ்சி
C) வாகை
D) வெட்சி

7. புறப்பொருட் பாடல்கள்.

A) ஒன்றிய பாட்டு
B) ஒன்றாப்பாட்டு
C) இரண்டு வகைப்பாட்டும்
D) இரண்டும் அற்றன

8. முப்பொருள்களுள் பின்னணியாக வருவது .

A) முதற்பொருள்
B) உரிப்பொருள்
C) கருப்பொருள்
D) முப்பொருள்

9. சுழியில் முடியும் எண்கள் கொண்ட பாடல்கள் அகநானூற்றில் எத்திணைக்கு உரியவாய் வந்துள்ளன?

A) முல்லைத்திணை
B) நெய்தல் திணை
C) மருதத்திணை
D) பாலைத்திணை

10. அகப்பொருட் பாடல்களில் வரலாற்றுச் செய்திகளை மிகுதியாகக் குறிப்பிட்டவர்

A) மாமூலனார்
B) பரணர்
C) வன்பரணர்
D) ஔவையார்

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

தமிழ்

PG-TRB (2020-2021)

UNIT-5

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 5 (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்
12 ஆம் வகுப்பு வரை
உள்ள பொதுத் தமிழ்
மற்றும்
சிறப்புத் தமிழ் (+1)
சிறப்புத் தமிழ் (+2)

COMPETITIVE EXAM
FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem
Trichy: 76399 67359 Salem: 93602 68118

PG TRB HISTORY 2020 - 21
UNIT – V (VOLUME-I)

மெய்ப்பாட்டியல்

நூல்வெளி : நம்பாடப் பகுதி தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் மெய்ப்பாட்டியலில் இடம்பெற்றுள்ளது. தொல்காப்பியம் தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் என்பதை அறிவோம். அது பழந்தமிழரின் நாகரிகச் செம்மையினைத் தெள்ளத்தெளிய விளக்கும் ஒப்பற்ற பெருநூலாகும். தமிழ்மொழியின் அமைப்பை விதிகளாக்கி விளக்குவதோடு தமிழ்க் கவிதையியலின் நுட்பங்களையும் பேசிகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரம் கவிதைகளுக்கான பொருண்மை, உறுப்புகள், உத்திகள், அழகு ஆகியவற்றைச் சிறப்புற எடுத்தியம்புகிறது. தொல்காப்பியத்தின் ஆசிரியரான தொல்காப்பியரைத் தமிழ்ச் சான்றோர், ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியன் என்று போற்றுகின்றனர். நூல் முழுமைக்கும் இளம்பூரணர் உடை எழுதியுள்ளார்,

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம், பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப

- தொல் (1197)

சொல்லும் பொருளும்

நகை	-	சிரிப்பு
இளிவரல்	-	சிறுமை
மருட்கை	-	வியப்பு
பெருமிதம்	-	பெருமை
வெகுளி	-	சினம்
உவகை	-	மகிழ்ச்சி

நூற்பா பொருள்

சிரிப்பு, அழுகை, சிறுமை, வியப்பு, அச்சம், பெருமை, சினம், மகிழ்ச்சி என்று மெய்ப்பாடு எண் வகைப்படும்.

இலக்கணக் குறிப்பு

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை – தொழிற்பெயர்கள்

உறுப்பிலக்கணம்

நகை - நகு + ஐ

நகு – பகுதி (ந்கை ஆனது விகாரம்)

ஐ – தொழிற்பெயர் விகுதி

மருட்கை - மருள் + கை

மருள் – பகுதி (ள், ட், ஆனது விகாரம்)

கை – தொழிற்பெயர் விகுதி

வெகுளி =- வெகுள் + இ

வெகுள் – பகுதி

இ – தொழிற்பெயர் விகுதி

மெய்ப்பாடுகளை விளக்கும்

இலக்கிய எடுத்துக்காட்டுகள்

TEACHER'S CARE ACADEMY

நகை (சிரிப்பு)

பாடிய பாணனின் குரலை எள்ளி நகையாடிய தலைவியின் கூற்று இது

ஈட்டுபுகழ் பாணநீ! எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவும் – காட்டிலழும்
பேயென்றாள் அன்னை, பிறர் நரியென்றார் தோழி
நாயென்றாள், நீ என்றேன் நான்!

பாடலின் பொருள்

“புகழ்மிக்க தலைவனின் புகழ்பாடுவோனே! நீ எங்கள் வீட்டின்முன் இரவு முழுவதும் பாடினாய். அதைக்கேட்டு என் தாய், விடியவிடியக் காட்டில் அழும் பேய் என்றாள்; பிறர், நரி ஊளையிட்டது என்றனர்; தொழியோ, நாய் குரைத்து என்றாள்; இல்லை நீ என்றேன் நான்”

அழுகை

தலைவன் காட்டில் புலியுடன் போராடி இறந்துபட, தலைவி துயரில் கூறுவது.

ஐயோ எனின் யான் புலி அஞ்சுவலே
அணைத்தனன் கொளினே அகன்மார்பு எடுக்கவல்லேன்
என்போல் பெருவிதிர்ப்பு உறுக, நின்னை
இன்னாது உற்ற அறனில் கூற்றே!

பாடலின் பொருள்

போரில் இறந்துபட்ட தலைவனின் உடலைப் பார்த்து தலைவி, ஐயோ எனக் கதறினால், காட்டில் உள்ள புலி வந்துவிடுமோ என அஞ்சுகிறேன். தூக்கி எடுத்துச் செல்லலாம் என்றால் அகன்ற மார்பு கொண்ட உன்னைத் தூக்கவும் இயலாது. இவ்வாறு துன்புறும் வண்ணம் செய்ததே கூற்றம். அக்கூற்றம் என்னைபோல் துன்புறட்டும்.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 5 (தொகுதி – 2)

தொல்காப்பியம் சுட்டும் உவகைக்கான களங்கள்	வீரசோழியம் காட்டும் சிருங்காரத்திற்கான களங்கள்
செல்வம்	வளமை
புலன்	-
விளையாட்டு	-
புணர்வு	கலவி
	இளமை
	வனப்பு

COMPETITIVE EXAM FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

PG TRB HISTORY 2020 - 21
UNIT – V (VOLUME-II)

பாடத்திட்டம்
❖ மெய்ப்பாடு
❖ மெய்ப்பாட்டின் அடிப்படை
❖ மெய்ப்பாட்டின் நிலைக்களன்கள்
❖ அகத்திணை மெய்ப்பாடுகள்
❖ புறனடை
❖ பொருள்கோள்
❖ தொல்காப்பியர் கூறும் பொருள்கோள்
❖ யாப்பருங்கலக்காரிகை
❖ உள்ளுறை
❖ உள்ளுறையுவமை வகை
❖ நம்பியகப்பொருள்
❖ இறைச்சி

மெய்ப்பாட்டியல்

(தொல்காப்பியத்தின் ஆறாம் இயல்)

மெய்ப்பாடு பற்றிய இவ்வியலில்

1. 'மெய்ப்பாடு' என்னும் சொல் விளக்கம்
2. எண் வகை மெய்ப்பாடுகள்
3. அவை தோன்றுவதற்கான காரணங்கள்
4. எண்வகை மெய்ப்பாடுகள் அல்லாத பிற மெய்ப்பாடுகள்
5. களவொழுக்கத்தில் மெய்யுறு புணர்ச்சியில் தோன்றும் மெய்ப்பாடுகள்
6. களவொழுக்க காலப்பிரிவில் தோன்றும் மெய்ப்பாடுகள்
7. திருமணத்திற்குத் தூண்டும் மெய்ப்பாடுகள்
8. இல்லற வாழ்க்கை வாழும் காலத்தில் தலைவியிடம் தோன்றும் மெய்ப்பாடுகள்
9. மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தும் தலைவன் தலைவியிடம் அமைய வேண்டிய பத்து வகைப் பண்புகள்

TEACHER'S CARE ACADEMY

10. தலைவன் தலைவியரிடம் அமையக் கூடாத பண்புகள், மெய்ப்பாடுகளை விளங்கிக் கொள்ளும் திறன்.

மெய்ப்பாட்டு அடிப்படைகள்

சுவை	**வகை**
1.நகை	1.எள்ளல் 2.இளமை 3.பேதைமை (அறிவின்மை) 4.மடம் (ஒன்றை வேறொன்றாகத் திரியக் கோடல்)
2.அழுகை (அவலம்)	1.இழிவு (இழிவுபடுத்துதல்) 2.இழவு உயிராவது பொருளாவது இழத்தல் 3.அசைவு (தளர்ச்சி) 4.வறுமை
3.இளிவரல்	1.மூப்பு 2.பிணி 3.வருத்தம் 4.மென்மை (மெலியர் எளியராதல்)
4.மருட்கை	1.புதுமை 2.பெருமை 3.சிறுமை (மிக நுண்ணியன) 4.ஆக்கம் (ஒன்றன் பரிணாமம்)
5.அச்சம்	1.அணங்கு (தெய்வம்) 2.விலங்கு, 3.கள்வர், 4.இறை (தந்தை, ஆசிரியர், உயர் அதிகாரி போல)
6.பெருமிதம்	1.கல்வி 2.தறுகண்மை (வீரம்) 3.புகழ் 4. கொடை
7.வெகுளி	1.உறுப்பறை (உறுப்புகளை வெட்டுதல்) 2.குடிகோள் (குடிமக்களை நலிதல்) 3.அலை(த்)தல் 4.கொலை
8. உவகை	1.செல்வம் 2.புலன் (அறிவுடைமை) 3.புணர்வு (மகளிரைக் கூடுதல்) 4.இன்பவிளையாட்டு

மெய்ப்பாடு

"சுவை என்பது காணப்படுபொருளால் காண்போரகத்தில் வருவதோர் விகாரம்" என்றும் "மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று" என்றும் **இளம்பூரணர்** விளக்குவர். இது நாடக நூல் அடிப்படையிலான விளக்கம்.

பேராசிரியர் "மெய்ப்பாடு என்பது பொருட்பாடு. அதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல்" என்று விளக்குவது இலக்கியச் சார்பான விளக்கமாகும். செய்யுளியலின் முதல் நூற்பாவில் அவர் மெய்ப்பாடென்பது சொற்கேட்டார்க்குப்பொருள் கண்கூடாதல்" என்று விளக்குவது மிகப்

TEACHER'S CARE ACADEMY

பொருத்தமுடையது. செய்யுளியலிலும் தொல்காப்பியர் (பொருளதிகாரம்) மெய்ப்பாடு என்ற கோட்பாட்டை விளக்குவார்.

"உய்த்துணர்வு இன்றித் தலைவரு பொருளான்

மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்" (1460) செய்யுளியல்

"எண்வகை இயல்நெறி பிழையாதாகி

முன்னுறக் கிளந்த முடிவினது அதுவே" (1461) செய்யுளியல்

மிகவும் ஆராய்ந்து உணரவேண்டாமல் பாடலைப் படித்தவுடனேயே அதில் வெளிப்படையாக வரும் பொருண்மையால் "மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடென்னும் உறுப்பாம்"

இவ்வாறு மெய்ப்பாட்டுறுப்பு அமையச் செய்யுள் யாக்க வேண்டிய இன்றிமையாமையைக் கூறியவர், மெய்ப்பாட்டியல் இறுதியில் மெய்ப்பாடு வெளிப்படுவது இலக்கியத்தை அனுபவிப்பவரைப் பொறுத்தும் அமையும் என்பதைத் திறன்பட விளக்குகிறார்.

"கண்ணினும் செவியினுந் திண்ணிதின் உணரும்

உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்

நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே" (1221) மெய்ப்பாட்டியல்

கண்ணாலும் செவியாலும் விளங்க உணரும் உணர்வுடைய மாந்தர்களுக்கு மெய்ப்பாட்டுப் பொருள்கோடல் எளிது. அல்லார்க்கு இது இயையாது. வாழ்வில் ஈடுபட்டுக் கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் அனுபவித்து வாழ்ந்த ஆழ்ந்த உணர்வுடையவர்கள் இலக்கிய இன்பத்தில் திளைப்பர். எனவே நுட்பமான இந்த இலக்கிய நுகர்ச்சிக்கு உரியார் யார் எனக் கூறிய பாங்கு பாராட்டற்பாலதாகும்.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

UNIT V

QUESTIONS

1. பெருமித மெய்ப்பாட்டு வகைகள் ------

A) சிறப்பு, நலன், காதல், வலி
B) செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு
C) கல்வி, தறுகண், இசைமை, கொடை
D) பதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம்

2. களிறும் கந்தும் போல நளிகடற் கூம்பும் கலனும் தோன்றும் - இவ்வடிகளில் அமைந்த பொருள்கோள் --------

A) கொண்டு கூட்டுப்பொருள் கோள்
B) எதிர்நிரனிறைப் பொருள்கோள்
C) நேர்நிரனிறைப் பொருள்கோள்
D) தாப்பிசைப் பொருள்கோள்

3. ஓடுநீர் ஆரல் பார்க்கும் குருகு முண்டுதான் மணந்த நான்றே - இவ்வடி களில் அமைந்த இறைச்சிப்பொருள்------

A) கொக்கு மீன்பிடித்தல்
B) தலைவி குறியிடம் கூறுதல்
C) தலைவி கழறி உரைத்தல்
D) கழற்றெதிர் மறை

4. இறைச்சி என்பதன் பொருள் ------

A) முதற்பொருள்
B) உரிப்பொருள்
C) முப்பொருள்
D) கருப்பொருள்

5. இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல் என்னும் மெய்ப்பாடுகள் இடம்பெறும் கூட்டம்

A) அழிவில் கூட்டம்
B) மளன் அழிவுக்கூட்டம்
C) களவுக் கூட்டம்
D) உடன்போக்கு

6. உள்ளுறை உவமப்போலி ஆகிய இரண்டும் அமன அழிவு - ஒன்றே எளக் கூறுபவர்

A) இளம்பூரணர்

B) பேராசிரியர்

C) சேனாவரையர்

D) தெய்வச்சிலையார்

7. தொல்காப்பியர் குறிப்பிடும் பொருள்கோள்

A) 8

B) 5

C) 3

D) 4

8. பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவு உரைத்தனரே இவ்வடியில் காணப் பெறுவது

A) உள்ளுறை

B) இறைச்சி

C) சுட்டு

D) நகை

9. மடப்பிணைக்குத் தன்னிழலைக் கொடுத்து அளிக்கும் கலை எனவும் உரைத்தனரே - என்னும் இறைச்சியாற் போந்த பயன்

A) தலைவனைச் சிறப்பித்தல்

B) தலைவியைப் புகழ்தல்

C) வன்புறை

D) அச்சுறுத்தல்

10. உள்ளுறை உவமம் எவ்வகையில் திணை உணர்த்துகிறது?

A) நேரடிப்பொருளால்

B) உருவகப் பொருளால்

C) உரிப்பொருளால்

D) முதற்பொருளால்

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

தமிழ்

PG-TRB (2020-2021)

UNIT-6

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 6 (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்
12 ஆம் வகுப்பு வரை
உள்ள பொதுத் தமிழ்
மற்றும்
சிறப்புத் தமிழ் (+1)
சிறப்புத் தமிழ் (+2)

COMPETITIVE EXAM
FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem
Trichy: 76399 67359 Salem: 93602 68118

PG TRB HISTORY 2020 - 21
UNIT – VI (VOLUME-I)

கவிதையியல்

கவிதை, **கதை**, **நாடகம்**, **கட்டுரை** என்ற நான்கும் இலக்கிய வடிவங்களாக உள்ளன. இவ்வடிவங்களுக்குள் பல வகைகள் இருக்கின்றன. இவ்விலக்கிய வடிவங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன. அவற்றிற்குள் இருக்கும் வகைகள் எவ்வாறு வேறுபடுகின்றன எனப் பேசுவது இலக்கியவியல் படிப்பு.

படைப்பாளன் தன் கருத்துக்களை உணர்ச்சிகளோடு வெளிப்படுத்தும் **வடிவம் கவிதை, பேசுபவர், எதிர் வினையாற்றுபவர்** ஆகிய இருவருக்குமான உரையாடல் வடிவம் நாடகம், படைப்பாளரே அனைத்துப் பாத்திரங்களையும் இயங்கச் செய்யும் வடிவம் கதை, படைப்பாளன் தன் கருத்துகளை முன்னிலைப்படுத்தி எழுதும் வடிவம் கட்டுரை, இவ்வாறு **கவிதை**, **நாடகம்**, **கதை**, **கட்டுரை** என்பனவற்றை இலக்கியவியல் வகைப்படுத்துகிறது.

இலக்கியவில் பற்றிய பேச்சு என்பது தமிழில் செய்யுளாகவே தொடங்குகிறது. தொல்காப்பியச் செய்யுளியல் கவிதையின் வடிவம். உள்ளடக்கம், வெளிப்பாட்டு முறை என அனைத்துக் கூறுகளையும் விளக்குகிறது.

தமிழின் தொல்லிக்கணமான தொல்காப்பியம் **மூன்று அதிகாரங்களில் ஐவகை இலக்கணங்களைக்** கூறுகிறது. எழுத்ததிகாரத்தில் **எழுத்துகளின் ஒலி மற்றும் வரிவடிவங்களின் தோற்றம், வகை, அளவு, எழுத்துகள் சொல்லாக மாறுதல், சொற்கள் புணர்தல்** போன்றவை விளக்கப்படுகின்றன. சொல்லதிகாரத்தில் சொற்களின் **வகை, உருபுகள், சொற்கள் இணைந்து தொடராக மாறுதல்** போன்றவை விளக்கப்படுகின்றன.

இவை பெரும்பாலும் நேர்ப்பொருளைத் தரக்கூடிய **பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும்** உரியன.

பொருளாதிகாரம் நேர்ப்பொருள் தரும் சொற்றொடர் பற்றிப் பேசாமல் புனைவாக உருவாக்கப்படும் சொற்றொடர்களின் மொழியையும் அதன் பொருளையும் பேசுகின்றது. தொல்காப்பியர் காலத்தில் புனைவாக உருவாக்கப்படும் **மொழி, பா ஆகவும், பாடல் – ஆகவும், பாட்டு ஆகவும் அறியப்பட்டன. பா, பாடல், பாட்டு ஆகியன எவ்வாறு உருவாக்கப்பட** வேண்டும். அதற்குள்ளே இடம்பெற வேண்டிய கூறுகள் எவை? அக்கூறுகளின் வழியாக்க் கிடைக்கும் நுட்பங்கள் என்ன? என்பதையெல்லாம் பொருளதிகாரம் விரிவாக விளக்குகிறது. இவையே பின்னர் **பாவியல் எனவும், கவிதையியல் எனவும் வரையறுக்கப்பட்டன**.

செய்யுளியலில் ஒரு பாலின் உறுப்புகள் 34 **என வரையறை செய்துள்ள தொல்காப்பியம் அடிகளின் அளவு**, அடிவரையறை, உண்டாக்கப்படும் ஒலியளவு போன்றவற்றையும் விரிவாகப் பேசுகின்றது. அவற்றைப் **பாக்களின் புறவடிவம்** எனக் கொள்ளலாம். புறவடிவத்தில் உள்ள வேறுபாடுகளின் அடிப்படையில் **பாக்கள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என வகைப்படுத்தப்படுவதை இவ்வியல் வழி அறிகிறோம்**. இப்புறவடிவங்களின் வழியாக உருவாக்கப்படும் இலக்கிய வகைகளின் வடிவங்களை.

"பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முது சொல்லொடு அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர்தண் பொழில் வரைப்பின்
நாற்போர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்"

- **தொல் .செய்யுளியல் 1336**

என்ற நூற்பாவின் வழியாக அறியலாம். பாக்களின் புறவடிவத்தைச் செய்யுளியலில் கூறிய தொல்காப்பியர். அதன் உள்ளடக்கத்தைப் **பொருளதிகாரத்தின் முதல் ஐந்து இயல்களில்** கூறியுள்ளார். கவிதையை எப்படி உருவாக்குவது? எப்படி வாசிப்பது? என்பதற்கான விரிவான பதில் தொல்காப்பியத்தில் கிடைக்கிறது.

தொல்காப்பியர் போன்றே உலக அளவில் இலக்கிய வாசிப்பிற்கு வழிகாட்டும் நூலான **கவிதையியலை** (Poetics) **எழுதியவர் அரிஸ்டாட்டில்**, நாடகத்தை எவ்வாறு வாசிக்கலாம்? நாடக உருவாக்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இந்நூலில் விளக்கியுள்ளார். ஒரு பாவில் அல்லது கவிதையில் மூன்று கூறுகள்

இடம்பெறுதல் சிறப்பு. அவை **முதற்பொருள்**, **கருப்பொருள்**, **உரிப்பொருள்** என்பன. **இம்மூன்றில் உரிப்பொருள்** முக்கியமானது என்பதை வலியுறுத்த,

"

"முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறை சிறந்தனவே
பாடலுள் பயின்றவை நாடும் காலை"

- அகத்திணையியல் 3

என்ற நூற்பாவைத் தொல்காப்பியர் எழுதியுள்ளார்.

தன்மனதிற்குள் தோன்றும் **அகநிலைப்பட்ட புணர்தல்**, **இருத்தல்**, **இரங்கல்**, **ஊடல்**, **பிரிதல்**, **ஒருதலைக்காமம்**, **பொருந்தாக்காமம்** ஆகிய உணர்வுகளை உரிப்பொருளாகக் கண்டு **அகக்கவிதைகள்** எழுதப்படுகின்றன. இவற்றை அகத்திணைகள் எனவும் இதற்கு மாறாக புறவாழ்க்கை குறித்து எழுதப்படுவனவற்றைப் **புறக்கவிதைகள்** எனவும் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார்.

முதற்பொருள் என்பது **நிலமும் பொழுதும்** (Space and Time), இலக்கிய உருவாக்கத்தை நாடகத்தின் வழியாக விளக்கும் அரிஸ்டாட்டில் இவ்விரண்டையும் மையப்படுத்துகிறார். பாத்திரங்களையும் அவற்றின் செயல்களையும் முதற்பொருளை மையப்படுத்தியே அமைத்துள்ளார். **காலம்**, **இடம்**, **பாத்திரங்கள் ஆகிய மூவோர்மைகள்** (Three unities) **இலக்கியத்தின் அடிப்படை**, **இவர் கூறிய பாத்திரமுரண் சார்ந்த தொடக்கம்**, **சிக்கல்**, **வளர்ச்சி**, **உச்சநிலை**, **வீழ்ச்சி**, **முடிவு** என அமையும் நாடக வடிவம் சிறந்த நாடக வடிவமாக உலகம் முழுவதும் போற்றப்படுகிறது.

வடிவம் பற்றிய விரிவான கருத்துக்களைச் சொல்லும் **தொல்காப்பியரும் அரிஸ்டாட்டிலும்** உள்ளடக்கத்தைப் பற்றி விரிவாகப் பேசவில்லை. ஒவ்வொரு மனிதனின் வெளிப்பாடும் புரிதலும் வெவ்வேறாக இருக்கும் என்பதால் உள்ளடக்கத்தை வரையறை செய்யும் முயற்சியை இருவருமே செய்யவில்லை. தொல்காப்பியரின் கவிதையியல் தந்துள்ள மரபைப் பின்பற்றித் தமிழில் ஒவ்வொரு காலகட்டத்திலும் கவிதைகள் எழுதப்பட்டன.

தமிழ்ச் **செவ்வியல் கவிதைகளில்**, **புறக்கவிதைகளின்** தொடர்ச்சியாக **அறவியல் கவிதைகளை** வாசிக்கலாம். விளக்கம் கூறலாம். அதேபோல் அக்கவிதைகளின் வளர்ச்சியாகத் தமிழில் தோன்றிய **பக்திக்கவிதை வடிவத்தைச் சொல்லலாம்**. புற இலக்கியத்தில் கவிஞர், கேட்பவர் தம் எதிரே இருப்பதாக

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 6 (தொகுதி – 2)

சங்க இலக்கியம்

SANGAM LITERATURE

COMPETITIVE EXAM

FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

PG TRB HISTORY 2020 - 21
UNIT – VI (VOLUME-II)

சங்க இலக்கியம் – சங்கம் பற்றிய குறிப்புகள் – பாட்டும் தொகையும் பகுப்பு முறை – சங்க இலக்கியச் சிறப்புகள் – ஔவையார் - பரணர் – கபிலர் – நக்கீரர் – செய்யுள் படைத்த அரசர்கள் – பெண்பாற் புலவர்கள்

முச்சங்கங்கள்

	முதற்சங்கம்	இடைச்சங்கம்	கடைச்சங்கம்
காலம்	4400	3700	1800
பாடிய புலவர்கள்	4449	3700	449
இடம்	தென்மதுரை	கபாடபுரம்	மதுரை
குறிப்பிடத்தக்கவாகள்	அகத்தியர், சிவபெருமான், முருகவேள், முரஞ்சியூர் முடிநாகராயா், நிதியின்கிழார்,	தொல்காப்பியர் மோசியார் வெள்ளுர்க்காப் பியினார், சிறுபாண்டரங்கன் திரையன் மாறன், கீரந்தை, துவரைக்கோன்	சிறுமேதாவியார், சேந்தம், பூதனார் பெருங்குன்றூர் கிழார், இளந்திருமாறன், நல்லந்துவனார், மருதனிளநாகனார், நக்கீரனார்.
இலக்கணம்	அகத்தியம்	அகத்தியம், தொல்காப்பியம்,	தொல்காப்பியம்
இயற்றிய நூல்கள்	புரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை	மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம், கலி, குருகு, வியாழமாலை அகவல், வெண்டாளி	நெடுந்தொகை, நற்தொகை, ஐங்குறுநூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து,

			பரிபாடல் 70, கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும்
நடைபெற்ற காலம் மன்னர்கள் ஆட்சி எல்லையில்	காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரை	வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் வரை	முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி ஈறாக
கவியரங்கேற்றிய காவலர் தொகை	89 பாண்டிய எழுவர்	59 பாண்டின் ஐவர்	49 பாண்டிய மூவர்

முச்சங்கங்கள் (இறையனார் களவியல் உரை)

<u>சங்கம் இருந்ததா:</u>

- சங்க உண்மையை மறுத்தவர்கள் பேராசிரியர் கே.என்.சிவராசபிள்ளை, பி.டி. சீனிவாசய்யங்கார், எஸ். வையாபுரிப்பிள்ளை, க.நமச்சிவாய முதலியார் போல்வர்.
- ஒரு சங்கம் (கடைச் சங்கம்) இருந்தது உண்மை என்போர் டி.ஆர்.சே'கிரி சாஸ்திரி, வீ.ஆர். இராமசந்திர தீட்சிதர், கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, எஸ். வையாபுரி பிள்ளை
- **<u>முச்சங்கம் இருந்தது உண்மையே</u>** என்பவர்கள் உ.வே.சா, **<u>கா.சு.பிள்ளை</u>** கா.அப்பாத்துரையார் பாவாணர்
- புணர்ப்பு, கூடல் அவையம், துறை, தொகை என்றெல்லாம் முன்பு அழைக்கப்பட்ட ஒன்றைத்தான் பின்பு சங்கம் என் அழைக்கலாயினர்.
- கி.பி 7-ஆம் நூற்றாண்டிற்கு பின் இவ்வழக்கு பெரிதும் காணப்படுகிறது.
- நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி – அப்பர்.
- கி.பி 5-ஆம் நூற்றாண்டில் சமண முனிவர் வச்சிரநந்தி மதுரையில் அமைத்த திரமிள சங்கம் என்ற அமைப்பால் சங்கம் என்ற வடமொழிப் பெயர் பெருவழக்காயிற்று.

<u>பாண்டியரும், தமிழரும்:</u>

அறங்கூறு அவையத்திற்கு உரியதென உறையூரைப் புகழ்தல் போல தமிழ் அவையத்திற்கு உரியதென மதுரையைப் புகழ்தல் பெருவழக்காயிற்று.

“தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின்

மகிழ் நனை மறுகின் மதுரை”(சிறுபாண்.)

“தமிழ் கெழு கூடல் தண்கோல் வேந்தே” (புறம்)

“தென் தமிழ் மதுரை” (மணி.)

“தமிழ் வையைத் தண்ணம்புனல்” (பரி.)

“முத்தும் முத்தமிழும் தந்து முற்றலால்” (கம்பர் - கிட்கிந்தை)

“வீயாத் தமிழுடையான், பல்வேறு கடற்றானைப் பாண்டியன் (யாப். குலம் உரைமேற்கோள்)

TEACHER'S CARE ACADEMY

“மா பாரதம் தமிழ்ப் படுத்தும்

மதுராபுரிச் சங்கம் வைத்தும்” --சின்னமனூர்ச் செப்பேடு

அகச்சான்றுகள்:

- “தொல்லாணை நல்லாசிரியர்
  புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
  நிலந்தரு திருவின் நெடியோன் - மதுரைக் காஞ்சி
- “நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து
  ஆறங்கரை நாவின் நான்மறை முற்றிய
  அதங்கோட்டாசாற்கு அரிலதபத் தெரிந்த” – பனம்பாரனார்.
- “ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
  மாங்குடி மருதன் தலைவனாக” (புறம்.)
- “முதுமொழி நீராப் புலன் நா உழவர்
  புதுமொழி கூட்டுண்ணும் புரிசை சூழ் புனலூர” (கலி.)
- “நிலனாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
  புலனாவிற் பிறந்த சொற் புதிதுண்ணும் பொழுதன்றோ?”

என்ற கலித்தொகை அடிகள் இளவேனிற் காலமாகிய சித்திரை வைகாசியில் இத்தகைய புதிய நூல்களின் அரங்கேற்றம் நிகழுமெனக் குறிப்பிடுகின்றது.

சங்கமிருந்த காலம்:

- கி.பி. 250க்கு முற்பட்டதென்பதும் கி.மு. 1000 தொடங்கி இச்சங்கங்கள் நடைபெற்றன என்பதும் பலரால் ஏற்கப்பட்ட முடிவாகும்.
- சங்க இலக்கியங்களில் வேங்கட மலைப் பகுதிகளை யாண்ட மழவர், கள்வர் மற்றும் கோசர், துளுவர், ஓவியர், ஆவியர், திரையர் எனப் பலர் குறிக்கப்பட பல்லவர் சுட்டப்படவில்லை. எனவே கி.பி 3 ஆம் நூற்றாண்டிற்கு முன்னராதல் வேண்டும்.
- சிலம்பில் வரும் கயவாகு, இலங்கையை கி.பி 171 முதல் கி.பி 193 வரை ஆண்டவன்.
- நந்தர்கள் சிறப்புற்றிருந்த காலம் கி.மு.5 “நந்தன் வெறுக்கை எய்தினும்” (அகம்.)
  பின் வந்த “மோரியர்” பற்றியும் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன
  “பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
  சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
  நீர்முதல் கரந்த நிதியங் கொல்லோ” (அகம் 265)

நந்தர்கள் நீரினடியிலும் பெருஞ்செலவத்தை மறைத்து வைத்திருந்தமை இதனாற் புலப்படும் நந்தர்களின் தலைநகரமாகிய பாடலிபுத்திரம் சோணையாறு கங்கையிற் கலக்குமிடத்தில் இருந்ததென்பது இந்திய வரலாறு. அதனைப் படுமரத்து மோசிகீரனார்.

TEACHERS CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem
Trichy: 76399 67359 Salem: 93602 68118

UNIT VI

QUESTIONS

1. "கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" -என்னும் அடிகளில் குறிஞ்சிப்பூ யாரைச் சுட்டும் ?

A) தலைவன் B) தோழி

C) நற்றாய் D) தலைவி

2. செங்கோன் தரைச்செலவு எச்சங்க நூல் கூறப்படுகிறது?

A) முதற்சங்கம் B) திரமிளசங்கம்

C) இடைச்சங்கம் D) கடைச்சங்கம்

3. அகநானூற்றைத் தொகுப்பித்தவன்

A) கடுங்கோன்

B) பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

C) நல்லந்துவனார்

D) பாண்டியன் உக்கிரப் பெருவழுதி

4. பத்துப்பாட்டிற்கு உரை எழுதியவர்-------

A) நக்கீரர் B) நச்சினார்க்கினியர்

C) பரிமேலழகர் D) இளம்பூரணர்

5. கபிலர் - பாரி, ஔவை - அதியன், பிசிராந்தை - கோப்பெருஞ்சோழன் ஆகியோர் நட்பினைக் குறிப்பிடும் நூல்

A) அகநானூறு B) பதிற்றுப்பத்து

C) புறநானூறு D) கலித்தொகை

TEACHER'S CARE ACADEMY

6. மதுரைக் காஞ்சியின் பாட்டுடைத் தலைவன்.

A) பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி

B) நிலந்தரு திருவிற் பாண்டியன்

C) கரிகாலன்

D) தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

7. கைக்கிளைப் பாடல் பாடிய பெண்பாற் புலவர்

A) ஔவையார்

B) நக்கண்ணையார்

C) ஆதிமந்தியார்

D) வெள்ளிவீதியார்

8. “படைப்புப்பல படைத்து” எனத் தொடங்கி மகப்பேற்றுச் சிறப்பினைப் பாடிய அரசன்

A) நெடுஞ்செழியன்

B) சோழன் நல்லுருத்திரன்

C) பாண்டியன் அறிவுடை நம்பி

D) ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்

9. அகப்பாடல்களில் வரலாற்றுச் செய்திகளை மிகுதியாகப் புகுத்திக் கூறிய புலவர்.

A) கபிலர்

B) பரணர்

C) நக்கீரர்

D) ஔவையார்

10. குறிஞ்சிப்பாட்டின் துறை

A) உடன்போக்கு

B) அறத்தொடு நிற்றல்

C) பாங்கிமதியுடன் பாடு

D) இயற்படமொழிதல்

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

தமிழ்

PG-TRB (2020-2021)

UNIT-7

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

C) பாங்கிமதியுடன் பாடு D) இயற்பட மொழிதல்

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 7 (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்
12 ஆம் வகுப்பு வரை
உள்ள பொதுத் தமிழ்
மற்றும்
சிறப்புத் தமிழ் (+1)
சிறப்புத் தமிழ் (+2)

COMPETITIVE EXAM
FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 Salem: 93602 68118

PG TRB HISTORY 2020 - 21
UNIT – VII (VOLUME-I)

காப்பிய இலக்கணம்

காப்பியம் என்று சொன்னதும் ஐம்பெரும்காப்பியங்களின் பெயர்களை மடமடவென்று சொல்லிவிடுவீர்கள் .காப்பியங்கள் என்பவை நீண்ட கதைப் போக்கு உடையவை என்பதை அறிந்திருப்பீர்கள் **.சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி** முதலிய நூல்களைக் கீழ்வகுப்புகளில் படித்தும் கதைகளைக் கேட்டும் இருப்பீர்கள். ஐம்பெருங்காப்பியங்களைப் போலவே ஐஞ்சிறுங்காப்பிய வகைகளும் தமிழில் உண்டு என்பதை அறிவீர்களா? எதன் அடிப்படையில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என வகைப்படுத்தப்படுகிறது?

பெயர்க்காரணமும் சொல்லாட்சியும்

காப்பித்தை ஆங்கிலத்தில் EPIC என்பர். இது EPOS என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியது. EPOS என்பதற்குச் **சொல்** அல்லது பாடல் என்பது பொருள் .இது வடமொழியில் காவியம் என வழங்கப்படுகிறது **.காப்பியம்** என்னும் சொல்லை, **காப்பு +இயம்** எனப் பிரித்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது என்றும் மொழியைச் சிதையாது காப்பது என்றும் காரணம் கூறுவர்.

சொல்லாட்சியும் நூல்களும்

ஐம்பெருங்காப்பியங்கள் என்ற வகைமை எப்போது தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறமுடியவில்லை .எனினும், உரைகளிளும் இலக்கிய நூல்களிலும் பஞ்சகாப்பியம், பஞ்சகாவியம் ஆகிய சொற்றொடர்களும் பெருங்காப்பிய நூல் வகைகளும் குறிக்கப்பட்டுள்ளன.

நன்னூலுக்கு உரை எழுதிய **மயிலைநாதர்**, தம் உரையில் **ஐம்பெருங்காப்பியம்** என்னும் சொற்றொடரையும் **தமிழ்விடுதூது** பாடிய புலவர் அந்நூலில் பஞ்சகாப்பியம் என்னும் சொற்றொடரையும் குறிப்பிடுகின்றனர் . **'பொருள்தொகை நிகண்டு', திருத்தணிகை உலா** ஆகிய நூல்கள், பெருங்காப்பியம் ஐந்து

எனக் குறிப்பிட்டு அவற்றின் பெயர்களையும் வழங்கியுள்ளன .சிறுகாப்பியங்கள் ஐந்து என்று வழங்கும் வழக்கம் சி.வை.தாமோதரனார் காலத்திற்கு முன்பே இருந்துள்ளது என்பது அவர் பதிப்பித்த சூளாமணி)1865) பதிப்புரையிலிருந்து அறிய முடிந்தது.

காப்பியத்தைக் குறிக்கும் பிறபெயர்கள்
பொருட்டொடர்நிலைச் செய்யுள், அகலக்கவி,தொடர்நடைச் செய்யள், விருத்தச் செய்யுள், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், மகாகாவியம்.

காப்பிய அமைப்புமுறை

காப்பியச் சிற்றுறுப்புகளாக **காதை, சருக்கம், இலம்பகம், படலம்** முதலானவை சிற்றுறுப்புகளாக அமைந்திருக்கின்றன **.காண்டம்** உன்பது வல சிற்றுறுப்புகளின் தொகுதியாக உள்ள பேருறுப்பைக்)பெரும்பிரிவு (குறிக்கும்.

காதை	-	சிலப்பதிகாரம், மணிமேகலை
சருக்கம்	-	சூளாமணி, பாரதம்
இலம்பகம்	-	சீவக சிந்தாமணி
படலம்	-	கந்தபுராணம், கம்பராமாயணம்
காண்டம்	-	சிலப்பதிகாரம், கம்பராமாயணம்

தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணம்

வடமொழியில் **'காவ்யதரிசம்'** என்ற நூலைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட அணியிலக்கண நூல், **'தண்டியலங்காரம்'** ஆகும் .இந்நூலில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்று இருவகையாகப் பிரிக்கப்பட்டுக் காப்பிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

காப்பியங்கள் ஒரேவகைச் செய்யுளாலும் அமையும்; பல்வகைச் செய்யுட்களாலும் அமையும்.

> *"பாவிகம் என்பது காப்பியப் பண்பே"* **(தண்டி, நூற்பா .89)**

பெருங்காப்பியம்

1. வாழ்த்துதல், தெய்வத்தை வணங்குதல், வருபொருள் உரைத்தல் என்ற மூன்றில் ஒன்றினைத் தொடக்கத்தில் பெற்று வரும் .அவற்றுள் இரண்டோ மூன்றோ வரலாம்.
2. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் பெருங்காப்பியத்தின் திரண்ட பொருளாக அமைந்திருக்க வேண்டும் .எனினும் இவற்றுள் பாவிகத்திற்கு ஏற்றவண்ணம் ஒன்றும் பலவும் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும்.

TEACHER'S CARE ACADEMY

3. தன்னிகர் இல்லாத் தன்மை உடையவனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. மலை)1), கடல்)2), நாடு)3), நகர்)4), சிறுபொழுது)5-10), பெரும்பொழுது)11-16), கதிரவன் தோற்றம்)17), சந்திரனின் தோற்றம்)18) ஆகிய பதினெட்டு உறுப்புகளும் இயற்கை வருணனைகளாக அமைதல் வேண்டும்.
5. திருமணம் புரிதல், மக்களைப் பெற்றெடுத்தல், முடிசூடல் முதலான நிகழ்வுகளைக் கொண்டிருக்க வேண்டும்.
6. அமைச்சர்களுடன் கலந்துரையாடல், தூது செல்லல், போர்ப் புரிய படைகள் அணிவகுத்தல், போர்நிகழ்ச்சி, வெற்றி பெறுதல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறுதல் வேண்டும்.
7. சந்தி எனப்படும் கதைப்போக்கு)தொடக்கம், வளர்ச்சி, விளைவு, முடிவு என்பவை (வரிசைப்படி அமைந்திருக்க வேண்டும்.
8. அமைப்பு முறையில் பெருங்காப்பிய உட்பிரிவுகளுள் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்ற பெயர்களில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.
9. எண்வகைச் சுவையும் மெய்ப்பாட்டுக் குறிப்புகளும் கேட்போர் விரும்பும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

சிலப்பதிகாரம் முதலான ஐம்பெருங்காப்பியங்களும் சிறப்பு வாய்ந்தவையே. எனினும், **பெருங்காப்பியத்திற்குரிய நான்குவகை உறுதிப் பொருள்களும் பிற உறுப்புகளும் முழுமையாக அமையப்பெற்று** விளங்கும் காப்பியம் சீவகசிந்தாமணியே என்பர்.

சிறுகாப்பியம்

அறம், பொருள், அன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஒன்றோ இரண்டோ குறைந்து வருவது சிறுகாப்பியம் ஆகும்.

பாவிகம்

காப்பியத்தின் பண்பாகப் 'பாவிகம்' என்பதைத் தண்டியலங்காரம் குறிக்கின்றது .காப்பியத்தில் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தினையே **பாவிகம்** என்பர் .***"பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப"*** என்பது கம்பராமாயணத்தின் பாவிகம் .***"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் .உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்"*** என்பது சிலப்பதிகாரத்தின் பாவிகம்.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 7 (தொகுதி – 2)

COMPETITIVE EXAM
FOR
PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 Salem: 93602 68118

PG TRB HISTORY 2020 - 21
UNIT – VII (VOLUME-II)

ஐம்பெருங்காப்பியங்கள்

திறனாய்வு நூல்கள்

1) சிலப்பதிகார திறனாய்வு - ம.பொ.சிவஞானம்
2) சிலப்பதிகார யாத்திரை - ம.பொ.சிவஞானம்
3) சிலப்பதிகார ரசனை - மார்க்கபந்து சர்மா
4) சிலம்பும்இ மேகலையும் - மார்க்கபந்து சர்மா
5) கானல் வரி - தெ.பொ.மீ
6) குடிமக்கள் காப்பியம் - தெ.பொ.மீ
7) சிலப்பதிகார ஆராய்ச்சி - ஔவை சு.துரைசாமிப்பிள்ளை
8) சிலப்பதிகார ஆராய்ச்சி - சுப்பிரமணியச்சாரியார்
9) சிலப்பதிகார விருந்து - ந.சஞ்சீவி
10) மாதவிஇ கண்ணகி - மு.வ
11) இரட்டைக் காப்பியங்கள் - வ.சுப.மாணிக்கம்
12) இளங்கோவடிகள் யார் - சிதம்பர ரகுநாதன்
13) சிலம்புச் செல்வம் - சுத்தானந்த பாரதியார்
14) கண்ணகி புரட்சிக்காப்பியம- பாரதிதாசன்
15) சிலப்பதிரகாரச் செய்தி - ம.ரா. போ. குருசாமி
16) சிலப்பதிகார தமிழகம் - சாமி சிதம்பரனர்
17) சிலம்பொலி - சிலம்பொலி செல்லப்பன்
18) சிலப்பதிகார சிந்தனை - ப.அருணாசலம்
19) சிலப்பதிகார உரை - பொ.வே.சோமசுந்தரனார்
20) சிலம்புத் தேன் - ந.சஞ்சீவி
21) தமிழ்க்காப்பியங்கள் - கி.வா.ஜகந்நாதன்
22) காவிய காலம் - எஸ். வையாபுரிப்பிள்ளை
23) தமிழில் காப்பியங்கள் - எஸ். சவுந்திரபாண்டியன்
24) காப்பிய பார்வை - வ.சுப. மாணிக்கம்

25) ஐஞ்சிறுகாப்பியங்கள் ஐந்திற்கும் - பொ.வே. சோமசுந்தரம் உரையெழுதியுள்ளார்

TEACHER'S CARE ACADEMY

ஐம்பெருங்காப்பியங்கள்

ஐம்பெருங்காப்பியங்கள் என்ற வழக்கு தமிழகத்தில் மிகப் பிற்காலத்தில் எழுந்திருக்க வேண்டும். வடமொழியில் நைஷதம் (உறர்ஷகவி)இ ரகுவம்சம்இ குமாரசம்பவம் (காளிதாசன்)இகிரேதார் ஜுனியம் (பாரவி)இ சிசுபாலவதம் (மகாகவி) ஆகிய ஐந்து காவியங்களையும் பஞ்சகாவியம்இ என்பர். இம்மரபைப் பின்பற்றித் தமிழிலும் இப்பெயர் சூட்டப்பட்டிருக்கலாம்.

“ஐம்பெருங்காப்பியம் எண் பெருந்தொகைஇ பத்துப்பாட்டு இ பதினெண் கீழ்க் கணக்கு என்னும் சிற்றிலக்கியங்களுள்ளும்” (நன். 387 உரை மயிலைநாதர்)

“கற்றார் வழங்கு பஞ்ச காப்பியம்” தமிழ் விடு தூது.

- ஐம்பெருங்காப்பியங்கள் என 19ஆம் நூற்றாண்டினரான கந்தப்ப தேசிகரே விளக்கியுள்ளார்.
- “சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம் படைத்தான்
  நந்தா மணிமே கலைபுனைந்தான் - நந்தா
  வளையா பதிதருவான் வாசவனுக்கு ஈர்ந்தான்
  திளையாத குண்டலகேசிக்கும்”
- காவியம் என்பது பற்றி திவாகரரே முதலில் பேசுகிறார். ஆனால் அவர் கூறுவது புராணக் காப்பியத்தையே. காப்பிய இலக்கணத்தைத் தண்டியலங்காரமே விரிவாகக் கூறுகிறது.
- ஐம்பெருங்காப்பியங்கள் என்ற தொடரை முதலில் நன்னூல் உரையில் மயிலைநாதர் குறிக்கின்றார். சிறுகாப்பிய மரபை சி.வை.தாமோதரன் பிள்ளை குறிக்கின்றார்.
- காலம் (சிலம்பு): இந்நூல் கி.பி.8 ஆம் நூற்றாண்டு என சுவாமிக்கண்ணு பிள்ளை கூறுகிறார். சிலப்பதிகாரத்தில் உள்ள கோள்களின் நிலையை வைத்து இவர் இதைக் குறிக்கின்றார்.

1. **சிலப்பதிகாரம்** 2. **மணிமேகலை** 3. **சீவகசிந்தாமணி** 4. **வளையாபதி** 5. **குண்டலகேசி.**

“பெருங்காப்பிய நிலை பேசுங்காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றின் ஒன்று
நாற்பொருள் பயக்கும் நடை நெறித்து
தன்நிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம்
நன் மணம் புணர்தல்இ பொன்முடி கவித்தல்இ
பூம்பொழில் நுகர்தல்இ புனல்விளை யாடல்இ
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்”
.... சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி”

- எனத் **தண்டியலங்காரம்** காப்பிய இலக்கணம் பற்றி விளக்குகிறது.

நாடகக் காப்பிய நன்னூல் - மணிமேகலை.

சோழர் காலத்தை காப்பியக் காலம் என்று வழங்குவர்

வகை தொகை :

வகை	தொகை
சிலப்பதிகாரம்	முத்தமிழ்க் காப்பியம்இ நாடகக் காப்பியம்
இரட்டைக்காப்பியம்	சிலப்பதிகாரம்இ மணிமேகலை
அகவற்காப்பியம்	அகவல். யாப்புடையன - பெருங்கதை முதல் மூன்று காப்பியங்களுள் அகவல் யாப்பின
முதல் ஐந்து காப்பியங்கள்	முதல் மூன்றுடன் சிந்தாமணிஇ சூளாமணி இரண்டையும் சேர்த்துக் காலத்தால் முற்பட்டவை எனக் கருதுவர்.
ஐம்பெருங்காப்பியங்கள்	சிந்தாமணிஇ சிலப்பதிகாரம்இ மணிமேகலைஇ வளையாபதிஇ குண்டலகேசி
ஐஞ்சிறு காப்பியங்கள்	யசோதர காவியம்இ உதயண குமார காவியம்இ நீலகேசிஇ நாககுமார காவியம்இ சூளாமணி
இராமாயணங்கள்	இராம கதைஇ கம்ப இராமாயணம்
புராணக் காப்பியங்கள்	பெரிய புராணம்இ கந்த புராணம்
பாரத நூல்கள்	பெருந்தேவனார் பாரதம்இ பாரத வெண்பா வில்லிபாரதம்இ நல்லாப்பிள்ளை பாரதம்இ நளவெண்பா இ நைடதம்
புராணங்கள்	திருவிளையாடற் புராணம்இ தல புராணங்கள் பிற.
சமயக் காப்பியங்கள்	
இசுலாமியம்	சீறாப்புராணம்
கிறித்தவம்	தேம்பாவணி இ இரட்சணிய யாத்திரிகம்.
இக்காலக் காப்பியங்கள்	பாஞ்சாலி சபதம்இ பாண்டியன் பரிசு இராவண காவியம்இ பூங்கொடி பிறஇ

- **தமிழண்ணல்**

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

UNIT VII

QUESTIONS

1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் பாடியவர்கள்

A) பதினெட்டுப் பேர் B) பதினாறு பேர்

C) பத்துப்பேர் D) பதினைந்து பேர்

2. திருக்குறளில் உள்ள இயல்களின் எண்ணிக்கை.

A) 9 B) 10

C) 6 D) 12

3. பழமொழி நூலின் ஆசிரியர்

A) நாதகுத்தனார் B) நல்லாதனார்

C) முன்றுறை அரையனார் D) கண்ணஞ்சேந்தனார்

4. பரணிக்கு வழிகாட்டிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்

A) திருக்குறள் B) இன்னிலை

C) கார்நாற்பது D) களவழி நாற்பது

5. சிந்தாமணி ஆசிரியர் பாடிய மற்றொரு நூல் புலவர்

A) நரிவிருத்தம் B) எலிவிருத்தம்

C) குயிற்பாட்டு D) பெருங்கதை

6. சூளாமணியின் ஆசிரியர்.

A) திருத்தக்க தேவர் B) உதீசித் தேவர்

C) தோலாமொழித் தேவர் D) கொங்குவேளிர்

7. தமிழ்த் தேசியக் காப்பியம் என்பது

A) மணிமேகலை

B) பெரியபுராணம்

C) சிலப்பதிகாரம்

D) சீவகசிந்தாமணி

8. ஒரே குடும்பக் கதையைக் கூறும் இருகாப்பியங்கள்

A) பெரிய புராணம், சீவகசிந்தாமணி

B) சிலப்பதிகாரம், மணிமேகலை

C) கம்பராமாயணம், வில்லிபாரதம்

D) குளாமணி, நாககுமார காவியம்

9. பழந்தமிழ் இசை இலக்கணத்தை விரிவாகக் கூறும் காப்பியம்

A) சீவக சிந்தாமணி

B) தொல்காப்பியம்

C) சிலப்பதிகாரம்

D) பல்காப்பியம்

10. “இதுவே அன்னாய் காமத்து இயற்கை" எனக் கூறுபவர்

A) மாதவி

B) காந்தருவதத்தை

C) உதயகுமாரன்

D) மணிமேகலை

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

தமிழ்

UNIT-8

PG-TRB (2020-2021)

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 8 (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்
12 ஆம் வகுப்பு வரை
உள்ள பொதுத் தமிழ்
மற்றும்
சிறப்புத் தமிழ் (+1)
சிறப்புத் தமிழ் (+2)

COMPETITIVE EXAM FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 Salem: 93602 68118

PG TRB HISTORY 2020 - 21
UNIT – VIII (VOLUME-I)

சமய இலக்கியங்கள்

பக்திமை – விளக்கம்

கடவுளை வணங்குதல் கடவுளிடம் தன்னை அர்ப்பணித்தல் என்னும் பொருளில் இன்று **பக்தி** என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. கடவுளின் மீது மனிதன் கொண்ட நம்பிக்கையைப் பக்தி என்பர். பக்தியால் அன்பு பெருகி உயிர் தூய நிலையை அடைகிறது. கடவுளின் மீது மனிதன் கொண்டுள்ள எல்லைகடந்த **அன்பே பக்தி** என்ற பொருளில் தமிழிலக்கியங்களில் மிகுதியும் கையாளப்படுகின்றது.

பக்தி இலக்கியங்களின் தோற்றம்

பக்தி இலக்கிய காலத்தில் இயற்றமிழ்ப் பாடல்கள் பண்ணோடு இயைந்து இசைத்தமிழ்ப் பாடல்களாக மாறின. கற்றோர் நாவில் மட்டும் நடனமாடிய தமிழ், கல்லாதார் நெஞ்சிலும் களிநடனம் புரிந்தது. வடமொழிச் சொற்களும் தமிழுடன் இணைந்து புதிய மரபு தோன்றியது. சொல் வளமும் உணர்ச்சிப் பெருக்கும், இசை இனிமையும் சேர்ந்து தமிழ் இலக்கியம் புது மெருகு பெற்றது. இந்த எழுச்சிக்கு ஆதரவளித்த பல்லவர் ஆட்சிக்காலம் பக்தி இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்காலம் எனப்படுகிறது. பக்தி இயக்கத்தால் தமிழகத்தில் தமிழுக்கு மீண்டும் புதுப்பொலிவு ஏற்பட்டது.

இக்காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்கள் தனித்தனிப் பாடல்களாகவும் பிரபந்தங்களாகவும் வெளிப்பட்டன.

சங்க இலக்கியத்தில் மாந்தரின் காதல் வாழ்வு கற்பனை கலந்த பாடல்களாகப் பாடப்பட்டது. பின்னர் இந்நிலை மாறி, தெய்வத்தின் மீது கொண்ட காதலைப் பாடும் பாடல்களாக வளர்ச்சிபெற்றன.

அரசர்களின் வீரம் மற்றும் கொடைகளைப் பாடிய பாடல்கள், கடவுளின் திருவிளையாடல்களையும் அருட்செயலையும் பாடும் பாடல்களாக மாறின. கற்பனைக் காதலுக்குப் பின்னணியாக இயற்கைச் சூழல் வருணிக்கப்பட்டது போலவே கடவுளிடம் செலுத்தும் பக்திக்குப் பின்னணியாகக் கோவில் தலங்களைச் சூழ்ந்த ஊர்களின் இயற்கையழகைப் பாடும் நிலை உருவானது.

தமிழகத்தில் பக்தி நெறி

சங்க காலத்திலும் அதற்குப் பின்னரும் இயற்கையை முன்நிறுத்திய வழிபாட்டு முறைகளும் (பராய்க்கடன், வெறியாட்டு போன்ற சடங்குகள்) நம்பிக்கைகளும் இருந்தன. அக்காலகட்டத்தில் வைதிக நெறியும், இதனை மறுத்த சமண பௌத்த நெறிகளும் தமிழகத்தில் பரவின.

சமண பௌத்த சமயங்கள், “உயிர், உடம்பு, பொருள், இளமை ஆகியன நிலையாக நில்லாமல் மறைந்துவிடக்கூடியன. இவற்றை உணர்ந்து அறத்தைச் செய்பவனாக மனிதன் மாற வேண்டும்” என்று வலியுறுத்தின. சமயப் பெரியோர் அருளுணர்வுடையோராகவும் பண்பாடு மிக்கவராகவும் இருந்தனர்.

மேலும், “பிறவா நிலையை அடைவதற்குத் துறவறமே சிறந்த வழி” என்ற அறவியல் கருத்து நிலவியது. உலகில் உள்ள நிலையில்லாத இன்பங்களை ஒதுக்கி, நிலையான வீடுபேற்றை நாடுவதே கடமை என்று கருதும் நிலை உருவானது.

இச்சூழலில், நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி “உலக இன்பங்களைத் துய்த்தவாறே இறைவனிடத்தில் பக்தி செலுத்தலாம். இறைவன் அன்பின் வடிவானவன், அன்பு ஒன்றே அவனை அடையும் வழி” என இல்லறத்திற்கும் முதன்மை கொடுத்தனர். ஊர்கள் தோறும் கோவில்களுக்குச் சென்று இசைப்பாடல்களால் மனமுருக இறைவனைப் பாடிப் பரவினர். அப்பாடல்கள், கற்றவர்களோடு மற்றவர்களும் கூடிப் பாடுமாறு எளிய இனிய தமிழில் இருந்தன. இறைவனை, ஆண்டான், தந்தை, தோழன், நாயகன் என பல பரிமாணங்களில் கண்டு போற்றினர். இவற்றையே தாச, சற்புத்திர, சக, ஞான மார்க்கங்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

திருநாவுக்கரசர், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் போன்றோர் அடிமை நெறியையும், திருஞானசம்பந்தர் பிள்ளைமை நெறியையும்.

சுந்தரர், திருமழிசையாழ்வார் போன்றோர் தோழமை நெறியையும், மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார் போன்றோர் நாயகன் நாயகி நெறியையும் பின்பற்றினர். பெரியாழ்வார் இறைவனைக் குழந்தையாக் கருதி தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார். அவர்தம் வளர்ப்பு மகளான ஆண்டாள் இறைவனையே தன்

TEACHER'S CARE ACADEMY

தலைவனாகப் பாவித்து வாழ்ந்தாள். சிவனைத் தலைவனாகக் கொண்ட 27 அடியார்கள் பாடிய பதிகங்கள் பன்னிரு திருமுறைகள் என்றும், திருமாலைத் தலைவனாகக் கொண்ட 12 ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் என்றும் அழைக்கப்பட்டன.

முகலாயப் படையெடுப்பின் காரணமாகத் தமிழகத்தில் இசுலாம் பரவியது. இசுலாமியக் கவிஞர்கள் தமிழ் மரபினைப் பின்பற்றி இறைவனையும், இறைவனின் திருத்தூதரான நபிகள் நாயத்தையும் போற்றிப் பரவினர். இசுலாமியப் பாடல்கள் மொழி பெயர்ப்புப் பாடல்களாகவும், நேரடிப் பாடல்களாகவும் இருவகைகளில் பாடப்பெற்றன.

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் மேலைநாட்டவர் பெருமளவில் தமிழகத்திற்கு வருகைபுரிந்தனர். அவர்களுள் கிறத்துவ மதபோதகர்களும் அடங்குவர். அவர்கள், பன்மொழிப் புலமையும் பல்துறை அறிவும் மிக்க தமிழ் மக்களிடம் இரண்டறக்கலந்து தமிழைக் கற்றனர். தமிழின்வழி தங்கள் சமயக் கருத்துகளைப் பரப்பினர். இதன் விளைவாக கிறத்துவ இலக்கியங்களும் தமிழில் பல்கிப்பெருகின.

பன்னிரு திருமுறைகள்

திருமுறைகள்	நூல்கள்	ஆசிரியர்கள்
முதல் திருமுறை இரண்டாம் திருமுறை மூன்றாம் திருமுறை	தேவாரம்	திருஞான சம்பந்தர்
நான்காம் திருமுறை ஐந்தாம் திருமுறை ஆறாம் திருமுறை	தேவாரம்	திருநாவுக்கரசர்
ஏழாம் திருமுறை	தேவாரம்	சுந்தரர்
எட்டாம் திருமுறை	திருவாசகம், திருக்கோவையார்	மாணிக்கவாசகர்
ஒன்பதாம் திருமுறை	திருவிசைப்பா, திருப்பல்லாண்டு	திருமாளிகைத்தேவர் உள்ளிட்ட ஒன்பது பேர்
பத்தாம் திருமுறை	திருமந்திரம்	திருமூலர்
பதினோராம் திருமுறை	40 நூல்களின் தொகுப்பு	காரைக்காலம்மையார் உள்ளிட்ட பன்னிர்ணடு பேர்
பன்னிரண்டாம் திருமுறை	திருத்தொண்டர் புராணம் (பெரியபுராணம்)	சேக்கிழார்

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 8 (தொகுதி – 2)

COMPETITIVE EXAM

FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

PG TRB HISTORY 2020 - 21
UNIT – VIII (VOLUME-II)

UNIT VIII – பக்தி இலக்கியம்

உள்ளடக்கம்

- பக்தி இலக்கியம்
- தேவாரம்
- திவ்வியப்பிரபந்தம்
- திருமந்திரம்
- திருப்புகழ்
- பட்டினத்தார்
- தாயுமானவர்
- அருணகிரிநாதர்
- கம்பராமாயணம்
- மகாபாரதம்
- பெரியபுராணம்
- திருவிளையாடற்புராணம்
- தலபுராணங்கள்
- சிற்றிலக்கியங்கள் – 96 வகை பிரபந்தங்கள்
- சமணமும் தமிழும்
- பௌத்தமும் தமிழும்
- இஸ்லாமும் தமிழும்
- கிறிஸ்துவமும் தமிழும்
- சித்தர்கள்
- சமயச்சீர்த்திருத்தம்

பக்தி இலக்கியம் (பல்லவர் காலம்)

- பல்லவர் காலம் (கி.பி. 600 – 875)
- இதனைப் பக்தி இயக்கக் காலம் அல்லது சைவ வைணவ காலம் என்பர்
- தொண்டை நாட்டையும் சேரநாட்டையும் களப்பிரரிடமிருந்து சிம்மவிஷ்ணு பல்லவன் (பிற்காலப் பல்லவ அரசன்) கைப்பற்றினான்.
- பாண்டியன் கடுங்கோன் களப்பிரரிடமிருந்து தன் நாட்டை விடுவித்தான்
- வடக்கே பல்லவர்களும், தெற்கே பாண்டியர்களும் தமிழகத்தை ஆண்டனர்
- இக்காலத்தில் சமண பௌத்த சமயங்கள் வலுவிழந்து சைவ வைணவ சமயங்கள் மேலோங்கின
- மன்னவன் வழியே மக்களும் ஒழுகினர்.
- வடக்கே திருநாவுக்கரசர் பல்லவ மகேந்திரவர்மனையும் தெற்கே திருஞானசம்பந்தர் பாண்டியன் நின்றசீர் நெடுமாறனையும் சமண சமய சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றினர்.
- தேவார திவ்யப்பிரபந்தங்கள் பிறந்த காலம்
- பல்லவர் காலத்தில் புதிய உரைநடையான மணிபிரவாள நடை தோன்றியது
- பிற இலக்கியங்களில் இல்லாத அளவில் மூவர் தேவாரமும், முதலாழ்வார் நீங்கிய ஒன்பதின்மரின் பிரபர்தங்களும் தோன்றின.
- கீழ்க்கணக்கில் நாலடியார் தொகுப்பெற்ற காலம் ஆகும்
- பல்லவர் கால இலக்கியங்கள்
  1. பெருங்கதை,
  2. நந்திக்கலம்பகம்,
  3. ஞானவுலா,
  4. பாரத வெண்பா
- பல்லவகால இலக்கண நிகண்டுகள்
  1. களவியலுரை
  2. சங்கயாப்பு பாட்டியல்
  3. பிங்களம்
  4. புறப்பொருள் வெண்பாமாலை
  5. திவாகரம்
- பிரபந்தங்கள் தோன்றத்தொடங்கிய காலம் பல்லவர் காலமே
- கி.பி. 7-இல் சைவம் சிறக்க வைணவம் தாழ்ந்திருந்தது கி.பி. 8 இல் வைணவம் வளமுற சைவம் சிறிதடங்கியது
- முதம் முதலில் தமிழ்நாட்டில் விநாயகர் வழிபாட்டைக் கொண்டு வந்தோர் பல்லவர்களே

பக்தி இலக்கியங்கள்

தமிழைப் பக்தி மொழி என்றும் ஜெர்மனி மொழியை தூதின் மொழி என்றும் இத்தாலி மொழியை காதலின் மொழி என்றும் ஆங்கில மொழியை வணிகத்தின் மொழி என்றும் மறைத்திரு தனிநாயகம் அடிகள் கூறியுள்ளார்.

1.சைவமும் – தமிழும்

- தமிழ்ச்சங்கத்தின் தலைவன் – சிவன்
- சைவப் பெரியோர்கள் பாடிய பாக்கள் திருமுறைகள் எனப்படும்
- திருமுறைகள் மொத்தம் பன்னிரண்டாகும். இதனைப் பன்னிரு திருமுறை என்றே கூறுவர்
- பன்னிரு திருமுறைகளைப் பாடிய மொத்த புலவர்கள் – 27 பேர்
- பன்னிரு திருமுறைகளின் பாடல் எண்ணிக்கை – 18,326
- முதல் மூவர் பாடிய முதல் ஏழு திருமுறைகளே ‘தேவாரம்’ என்றழைக்கப்படுகிறது

TEACHER'S CARE ACADEMY

- தேவாரத்திற்கு மூவர் தமிழ் என்ற பெயரும் உண்டு
- திருமுறையைத் தொகுத்தவர் 'நம்பியாண்டார் நம்பி'
- திருமுறைகளைத் தொகுப்பித்தவர் 'முதலாம் ராசராசன்; இவருக்குத் திருமுறை கொண்ட சோழன் என்ற பெயரும் உண்டு. இக்கருத்தே பெரிதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சிலர் திருமுறைகளைத் தொகுப்பித்தவன் முதலாம் ஆதித்தன் என சதாசிவப்பண்டாரத்தார், ஔவைதுரைசாமி பிள்ளை மற்றும் இரண்டாம் ஆதித்தன் என்று சோமசுந்தர தேசிகர் ஆகியோர் கருதுகின்றனர்.
- நம்பியாண்டார் நம்பி தொகுத்தது 11 திருமுறைகள் மட்டுமே
- சேக்கிழார் பாடிய பெரிய புராணம் நம்பியாண்டார் நம்பியின் காலத்திற்குப் பின் தொகுக்கப்பட்டது
- முதல் மூவர் – மூவர் முதலிகள் – தமிழ் மூவர் – என்பவராவார். – திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் – என்ற மூவரே
- இவர்களுடன் மாணிக்கவாசரையும் சேர்த்து சைவ சமயக் குரவர்கள் – நால்வர் என்பர்
- நாயன்மார்களின் மொத்த எண்ணிக்கை – 63
- 63 நாயன்மார்களில் இடம்பெறாத சைவ சமயப் பெரியோர் – மாணிக்கவாசகர்
- தமிழ் வியாசர் என்று அழைக்கப்படுபவர் – நம்பியாண்டார் நம்பி

பன்னிருத்திருமுறைகளாவன :

- 1, 2, 3 – திருமுறைகள் – திருஞானசம்பந்தர் தேவாரம்
- 4, 5, 6 திருமுறைகள் – திருநாவுக்கரசர் தேவாரம்
- 7 ஆம் திருமுறை – சுந்தரர் தேவாரம்
- 8 ஆம் திருமுறை – மாணிக்கவாசகர் (திருவாசகம், திருக்கோவையார்)
- 9 ஆம் திருமுறை – திருமாளிகைத்தேவர் – முதலான 9 பேர் பாடிய திருவிசைப்பா மற்றும் திருப்பல்லாண்டு
- 10 ஆம் திருமுறை – திருமூலரின் திருமந்திரம்
- 11 ஆம் திருமுறை – காரைக்காலம்மையர் முதலான பன்னிருவர் பாடிய (40) நூல்கள்
- 12 ஆம் திருமுறை – சேக்கிழாரின் பெரியபுராணம்

நாயன்மார்களின் வரலாறு

1. திருஞானசம்பந்தர்

- இயற்பெயர் – ஆளுடைப்பிள்ளை
- பெற்றோர் – சிவபாத இருதயர் – பகவதியம்மை
- பிறந்த ஊர் – சீர்காழி
- பிறந்த நாள் – சித்திரை – திருவாதிரை நாள்
- பிறந்த குலம் – அந்தணர்
- இறைவன் ஆட்கொண்ட இடம் – சீர்காழி
- வேறுபெயர்கள் – காழிவள்ளல், முத்தமிழர்கரன், கவுணியர்கோமரன், மறைபயில் திப்பியவாசகன், கலை வித்தகன், பரசமயகோளாரி, செழுமலையத்தமிழ்க்கேசரி
- வையகத்தில் வாழ்ந்த ஆண்டுகள் – 16 வயது
- இறைவனுடன் இரண்டற கலந்த இடம் – திருபெருமண நல்லூர்
- இறைவனுடன் இரண்டற கலந்த நாள் – வைகாசி மூலநாள்

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

UNIT VIII

QUESTIONS

1. இல்லறத்தைப் போற்றும் பக்தி இலக்கியம்

A) நாலாயிரம் B) திருமந்திரம்

C) தேவாரம் D) திருவாய்மொழி

2. திருப்பாவை ஜீயர் என்பவர்

A) நம்மாழ்வார் B) இராமானுஜர்

C) பெரியாழ்வர் D) ஆண்டாள்

3. பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி எனச் சேக்கிழாரைப் புகழும் புலவர்.

A) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை B) குமரகுருபரர்

C) தாயுமானவர் D) ராமலிங்க அடிகளார்

4. எளிய தமிழ்ப்பாடல்களை இயற்றிட வள்ளலாருக்கும் பாரதியாருக்கும் வழிகாட்டியாக அமைந்தவர்

A) அருணகிரிநாதர் B) தாயுமானவர்

C) வீரமாமுனிவர் D) பரஞ்சோதியார்

5. வில்லிபுத்தூராழ்வாரைப் புரந்த வள்ளல்

A) சடையப்ப வள்ளல்

B) அதிவீரராம பாண்டியன்

C) வக்கபா வரபதியாட் கொண்டான்

D) சந்திரன் சுவர்க்கி

TEACHER'S CARE ACADEMY

6. மதுராபுரிச் சங்கம் வைத்தும் மாபாரதம் தமிழ்ப் படுத்தும் எனக் கூறுவது.

A) வேள்விக்குடிச் செப்பேடு

B) சின்னமனூர்ச் செப்பேடு

C) சுந்தர பாண்டியன் செப்பேடு

D) இராசராசன் கல்வெட்டு

7. கலம்பக நூல்களில் முதலில் தோன்றியதும் கடைசியாகத் தோன்றியதும்

A) நந்திக் கலம்பகம், திருவரங்கக் கலம்பகம்

B) திருவெங்கைக் கலம்பகம், காசிக்கலம்பகம்

C) நந்திக் கலம்பகம், கந்தவனக் கலம்பகம்

D) திருக்காவலூர்க் கலம்பகம், நந்திக்கலம்பகம்

8. இசுலாமியச் சித்தர் என அழைக்கப்படுபவர் .

A) உமறுப்புலவர்

B) மஸ்தான் சாகிபு

C) சேகனாப்புலவர்

D) வண்ணக்களஞ்சியப் புலவர்

9. கிறித்துவக் கம்பர் எனப் போற்றப்படுபவர் .

A) வீரமாமுனிவர்

B) ஜி.யு.போப்

C) எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை

D) வேதநாயகம் பிள்ளை

10. திருநாவுக்கரசின் இயற்பெயர்

A) தருமசேனர்

B) மருணீக்கியார்

C) நம்பியாரூரச்சர்

D) திருவாதவூரர்

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

தமிழ்

PG-TRB (2020-2021)

UNIT-9

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 9 (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்
12 ஆம் வகுப்பு வரை
உள்ள பொதுத் தமிழ்
மற்றும்
சிறப்புத் தமிழ் (+1)
சிறப்புத் தமிழ் (+2)

COMPETITIVE EXAM

FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018

B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

PG TRB HISTORY 2020 - 21
UNIT – IX (VOLUME-I)

தமிழ்ச்சிறுகதை – தோற்றமும் வளர்ச்சியும்

ஆதிமனிதன் தனது அனுபவத்தை அல்லது நடந்த நிகழ்வை அடுத்தவரிடம் விவரித்த போது கதைசொல்லுதல் என்னும் கலை ஆரம்பித்தது. அதைச் சொல்பவர் தமது சொல்லும் திறனுக்கேற்ப உவமைகளோடும் வருணனைகளோடும் சொன்னபோது, அது கேட்பவரைக்கவர்ந்திழுக்கிற ஒருவலிமையான தொடர்பு வடிவமாக உருவானது.

தொடக்கத்தில் தமிழ்மரபில் கதைகள் வாய்மொழியாகவே சொல்லப்பட்டன. பின் உரைநடை கலந்த கதைப்பாடல்கள் கதைகளைத் தந்தன. மொழியின் வரிவடிவம் செழுமைப்பட்ட பிறகு, கதை இலக்கியம் எழுத்தில் பதிவானது.

தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின்

"பொருள் மரபில்லாப் பொய்ம்மொழியானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்"

- **(பொரு. செய். 1420)**

என்ற அடிகளைத் தமிழின் உரைநடை மரபை உணர்த்தும் அடிகளாகக் கொள்ளலாம்.

பொருள் மரபில்லாப் பொய்ம்மொழியானும் என்பதற்கு, கற்பனை கலந்த புனைவு மொழியாக, அதாவது 'யானையும் குருவியும் தமக்குள் நட்புப் பாராட்டிப் பேசிக்கொள்வதைப் போல' எனவும், பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் என்பதற்கு, 'உண்மை கலந்த வேடிக்கைப் பேச்சு' எனவும் உரையாசிரியர் விளக்கம் தருவர்.

மரபிலிருந்து மேற்கூறிய இரு கூறுகளையும் எடுத்துக்கொண்டு பாரதியார் தமது கதையை உருவாக்கினார். அவரது 'காக்காய் பார்லிமெண்ட் கதையில் காகங்களின் பேச்சு உண்மை கலந்த வேடிக்கைப் பேச்சாக' இருக்கின்றன. இந்த மரபுக்கூறுகளுடன் அமைந்த அவருடைய ஆறில்' ஒரு பங்கு (1910) கதை, தமிழின் தொடக்ககாலக் கதைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சிறுகதையை மேலை நாடுகளின் இலக்கிய வடிவமாகத் திறனாய்வாளர்கள் வரையறுக்கின்றனர். உலகச் சிறுகதைகள் அமைந்த வடிவத்தைப் பின்பற்றியே தமிழ்ச் சிறுகதைகளும் எழுதப்பட்டன. சிறுகதை என்பது ஒரு சம்பவம், ஒரு மனநிலை, ஒரு சிக்கல் என ஒரு பொருள் பற்றி மட்டுமே எழுதுவது. எந்த நோக்கத்தோடு கதை எழுதப்படுகிறதோ, அதை நோக்கியே கதையின் அனைத்துக் கூறுகளும் செல்லும் ஓர்மை கொண்டது. வாசகன் ஊகித்தறிய முடியாத ஒரு திருப்பத்தை இறுதியில் கொண்டு முடிவது. இந்த வரையறைக்கு உட்பட்டே திறனாய்வாளர்களால் சிறுகதையின் வடிவம் மதிப்பிடப்படுகிறது.

தமிழில் மேற்கூறிய சிறுகதைக்கான வடிவ அமைதியுடன் வெளிவந்த முதல் சிறுகதையாக, வ.வே.சு. என்றழைக்கப்பட்ட வரகனேரி வேங்கடேச சுப்ரமணியம் எழுதிய 'குளத்தங்கரை அரசமரம்' (1915) அறியப்படுகிறது. ஓர் அரசமரம் பேசுவது போல் அமைந்த இக்கதை, அதன் சமகாலச் சிக்கலை நுட்பமாகப் பேசிச்செல்கிறது. அ.மாதவையாவின் சிறுகதைகளும் தொடக்ககாலச் சிறுகதைகளாக அறியப்படுகின்றன.

தமிழ்ச்சிறுகதைப் படைப்பாளர்களைப் பொதுவாக ஐந்து தலைமுறையினராக நாம் பிரித்து மதிப்பிடலாம்.

முதல் தலைமுறை

தமிழ் நவீன இலக்கியத்தைத் தொடக்கத்திலேயே செழுமைப்படுத்தியவர் புதுமைப்பித்தன். அவரது சமகால எழுத்தாளர்களான ந. பிச்சமூர்த்தி, மௌனி, கு.ப. ராஜகோபாலன், பி.எஸ்.ராமையா, சிதம்பர சுப்பிரமணியன் ஆகியோரைத் தமிழ்ச்சிறுகதையின் முன்னோடிகளாகக் கொள்ளலாம். இவர்கள் அனைவரும் சிறுகதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த மணிக்கொடி இதழில் எழுதியவர்கள். இக்காலகட்டம் மணிக்கொடி காலம்' என்றே அழைக்கப்பட்டது. நா.பார்த்தசாரதி, அகிலன் ஆகியோர் புகழ்பெற்ற இலட்சியவாதக் கதைகளைப் படைத்தனர். இக்காலகட்டத்தில் எழுதிய கல்கி, பொழுதுபோக்குத் தன்மை கொண்ட கதைகளைத் தந்தார்.

இரண்டாம் தலைமுறை

புதுமைப்பித்தனைத் தொடர்ந்து லா.ச. ராமாமிர்தம், க.நா. சுப்ரமணியம், சி.சு. செல்லப்பா, எம்.வி. வெங்கட்ராம், ஆர். சண்முகசுந்தரம் போன்ற படைப்பாளிகளிடம்

TEACHER'S CARE ACADEMY

இருந்து சமரசமில்லாத சமூக விமர்சனக் கதைகள் எழுந்தன. பெண்களால் எழுதப்படும் பெண்ணுலகச் சித்திரிப்புக் கதைகள் குமுதினி, டி. பி. ராஜலெட்சுமி, கி. சரஸ்வதியம்மாள் போன்றவர்களால் எழுதப்பட்டன.

மூன்றாம் தலைமுறை

இக்காலகட்டத்தில் முன்னோடிகள் போட்ட பாதையில் வேகம் பிடித்த தமிழ்ச் சிறுகதை, அதன் உச்சங்களைத் தொட்டது. எளிய மனிதர்களின் பண்புநலன்களை நுட்பமாகப் பதிவுசெய்த கு.அழகிரிசாமி, கவித்துவமான சொற்சித்திரங்களைப் படைத்த நகுலன், மனித உறவுகளையும் மனச்சலனங்களையும் சித்திரித்த தி.ஜானகிராமன், சிறந்த வடிவ ஓர்மையுடன் எழுதிய சுந்தர நாமசாமி, பெருநகர நடுத்தர வாழ்வை எழுதிய அசோகமித்திரன் ஆகியோரின் படைப்புகள் வெளிவந்தன.

அறிவோம் தெளிவோம்

உலகச் சிறுகதை ஆசிரியர்கள்

உலக அளவில் சிறுகதையின் வடிவக் கூறுகளைக் கொண்ட கதைகள் 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருந்தாலும், 19ஆம் நூற்றாண்டில்தான் முழுவீச்சில் வெளிப்படத் தொடங்கின.

அமெரிக்க எழுத்தாளர்களான எட்கர் ஆலன்போ , ஓ ஹென்றி, நதானியல் ஹாதர்ன், வாசிங்டன் இர்விங் போன்றோர் சிறுகதையின் முழுமையான வடிவச் சிறப்போடு அமைந்த சிறுகதைகளைத் தந்தனர். குறிப்பாக ஓ ஹென்றியின் கதைகளில் வரும் கடைசித் திருப்பம் இன்றுவரை உலகப்புகழ் பெற்று விளங்குகின்றது.

பிரெஞ்சு எழுத்தாளர்களான போம்பெவல், மாப்பஸான், மெரிமீ, பால்சால்க் போன்றோர் சிறுகதையின் தொடக்ககால நிலையில் அதன் அனைத்துச்

சாத்தியங்களோடும் படைத்துக் காட்டியவர்கள். குறிப்பாக, இன்றளவும் மாப்பஸான் கதைகள் உலகப்புகழ் பெற்று விளங்குகின்றன. தமிழின் சிறந்த சிறுகதை எழுத்தாளரான புதுமைப்பித்தன் தமிழகத்தின் மாப்பஸான் என்று அழைக்கப்படுவது, மாப்பஸான் கதைகளின் வீச்சினைப்புரிந்துகொள்ள உதவுகிறது.

ரஷ்ய எழுத்தாளர்களான ஆண்டன் செகாவ், துர்கனேவ், கோகல் ஆகியோர் புகழ்பெற்ற சிறுகதைகளை எழுதியவர்கள். செகாவ் சிறுகதை வடிவத்தை மிகச்சிறந்த கலைவடிவமாக்கியவர். இவர் தம் சிறுகதைகள் நகைச்சுவையும் அங்கதமும் கலந்தவை. ரஷ்ய சிறுகதையின் தந்தை எனப் போற்றப்படும் கோகலின் மேலங்கி என்னும் சிறுகதை எண்ணற்ற எழுத்தாளர்களை உருவாக்கிய கதை எனலாம்.

www.tnpscguide.com

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 9 (தொகுதி – 2)



COMPETITIVE EXAM
FOR
PG-TRB 2020 – 21

TEACHER’S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem
Trichy: 76399 67359 Salem: 93602 68118

PG TRB HISTORY 2020 - 21
UNIT – IX (VOLUME-II)

உரைநடை

வ.எண்	உள்ளடக்கம்
1.	**I. உரைநடை** 1. குறிப்பிட்டத்தக்க திறனாய்வு நூல்கள், உரைநடை சொல்விளக்கம், உரைவகை உரையின் சிறப்பு
	2. காலந்தோறும் உரைநடை பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், 17, 18 ம் நூற்றாண்டு, 19, 20 ஆமு நூற்றாண்டுகள்
	3. ஈழநாட்டு உரைநடை
2.	**II. உரைவகை** 1. இலக்கண உரைகள்
	2. இலக்கிய உரையாசிரியர்கள்
	3. சமய இலக்கிய உரையாசிரியர்கள்
	4. பிரபந்த உரையாசிரியர்கள்
	5. சாத்திர உரைகள்
	6. இக்கால உரையாசிரியர்கள்
3.	**III. பிற உரைநடை வகைகள்** கட்டுரை இலக்கியம், வாழ்க்கைவரலாறு, சுயசரிதம், இலக்கியவரலாறு, தமிழ்நாட்டு வரலாறு, வசனம், சொற்பொழிவு, குழந்தை இலக்கியம் ஒப்பியல் இலக்கியம், அகராதிக்கலை, மொழிபெயர்ப்புகள், பயண நூல்கள், கடித இலக்கியம், அறிவியல் தமிழ், நாட்டுப்புற இலக்கியம், கல்வெட்டியல்.
	தமிழில் பதிப்பு முயற்சி
	இலக்கியத்துறை, ஆராய்ச்சி நூல்கள்

TEACHER'S CARE ACADEMY

உரைநடை

- **குறிப்பிடத்தக்க திறனாய்வு நூல்கள்**
  - உரையாசிரியர்கள் : மு.வை அரவிந்தன்
  - உரைமரபுகள், இரா.மோகன், நெல்லை நா. சொக்கலிங்கம்
  - தமிழ் உரைகளின் தோற்றமும் வளர்ச்சியும் – மு.வை.அரவிந்தன்
  - தமிழ் உரைநடை வரலாறு – வி. செல்வநாயகம்
  - வளரும் தமிழ் – சோமலே
  - 19 ம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி, தமிழ் உரைநடை – ஆ.மு. பரமசிவானந்தம்
  - 19 ம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் – மயிலை சீனி. வேங்கடசாமி
  - தற்கால தமிழ் இலக்கியம் – இரா. தண்டாயுதம், ஏ.வி. சுப்பிரமணிய ஐயர்.
  - தமிழ் உரைநடை வளர்ச்சி – இரா. தண்டாயுதம்.
  - புதிய உரைநடை பண்பும், பயனும் – மா. இராமலிங்கம்.
  - தேசியம் வளர்த்த தமிழ் – கா.திரவியம்
  - பாரதிக்குப்பின் தமிழ் உரைநடை – வல்லிக்கண்ணன்.
  - இன்றைய தமிழ் வசன நடை – மு. அருணாச்சலம்
  - வழிவழிவந்த வசன நடை – மு. அருணாச்சலம்
  - வழிவழிவந்த வசன நடை – த. அழகிரிசாமி
  - இருபது நூற்றாண்டுகளில் தமிழ் – சோம. இளவரசு
  - உரைநடை வளர்ச்சி – நா.வானமாமாலை
- **உரைநடை – சொல்விளக்கம்**
  - சொற்களை சிறந்த இடத்தில் அமைப்பது உரைநடை என்று கால்ரிட்ஜ் கூறியுள்ளார். மக்களுக்கு எளியமுறையில் கருத்துக்களைத் தெளிவுபடவும், சுவைபடவும் நிரல்படவும் சொற்களில் சொல்வதும் எழுதுவதும் உரைநடை எனப்படும். பாட்டே முன் தோன்றியது பின்னரே உரை நடை உண்டானது.
  - **உரைநடை** என்ற சொல்லை முதலில் தமிழ் லெக்சிகன் (1922) குறிக்கின்றது. இதற்கு முன்னர் வெளிவந்த வின்ஸ்லோ அகராதியில் (1862) **“உரைவாசகம்”** என்றும், சோமசுந்தர பாரதியின் நூலில் (1922) **“வசன நடை”** என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர்கள் உரை என்பதற்குச் சொல், சொல்லுதல், ஒலித்தல் என்றும், நடை என்பதற்கு மொழியின் போக்கு என்றும் பொருள் கொண்டனர். எனவே Prose Style என்பது உரைநடை ஆயிற்று. எனவே இச்சொல் 1922 அளவில் உருவானது எனக் கொள்ளலாம்.
- **உரை வகை (செய்யுளுக்கானது)**

நன்னூலார் பாடம், கருத்து, சொல்வகை, சொற்பொருள் தொகுத்துரை, உதாரணம், வினா, விடை, விசேடம், விரிவு, அதிகாரம் துணிவு, பயன், மேற்கோள் என்னும் 14 வகை உரைகளைக் (நன்.நூ.21) கூறியுள்ளார்.

- தொல்காப்பியர் 173 ஆம் நூற்பாவில் உரைநடை வகையினை நான்காகப் பகுக்கிறார்.

1. பாட்டிடை வைத்த குறிப்பினாலும்.
2. பாவின் றெழுந்த கிளவியானும்
3. பொருண்மர பில்லாப் பொய்மொழி யானும்
4. பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்று உரைவகை நடையே.

- நான்கென மொழிய.

- பாட்டுகளுக்கிடையே உரைநடை கலந்து வந்த நூல்களைக் குறிக்கின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக, பெருந்தேவனார் பாரதமும், தகடூர் யாத்திரையும் இயம்பப்படுகின்றன. இவை இன்று கிடைக்கவில்லை, இளங்கோவின் "உரைநடையிட்ட பாட்டுடைச் செய்யுள்" சிலப்பதிகாரம் சான்றாக அமைகிறது. 2. தனித்த உரைநடை நூல்களைக் குறிக்கின்றன. சிலர், "பாட்டிற்கு உரையாகக் கூறப்படும் உரைநூல்" களைச் சுட்டுவதாகும் என்கின்றனர். 3, 4, இரண்டும், ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து செல்லும் நவீனங்களும், நகுதற்கு ஏதுவாகிய நாடகங்களும் சிறுகதைகளும், குறிப்பதாகவும், அகம், புறம் எனும் இருதிணைகளோடு தொடர்புற்றதும் – தொடர்புறாததுமான நூல்களைப் பற்றியன என்றும் கூறுவர்.

(செய்யுள் என்பது செய்யப்படுவது இசைக்கப்படுவது இசை, அளக்கப்படுவது அளவை, நிறுக்கப்படுவது நிறுவை, கலைக்கப்படுவது கலை, மொழியப்படுவது மொழி, பாடப்படுவது பாட்டு, உரைக்கப்படுவது உரை)

உரைவகை

- **உரையின் தொன்மை**

இலத்தின் மொழியில் 2009 ஆண்டுகளுக்கு முன்னரே உரைநடை இருந்துள்ளது. தமிழில் ஐரோப்பியர் வரவுக்கு முன் உரைநடையில் எழுதுவது சிறுமையாக இருந்தது.

- உரையாசிரியர்களின் உரைக்கு.

"தொன்மைதானே
உரையொரு புணர்ந்த பழமை மேற்றே"

- என்னும் தொல்காப்பிய நூற்பா (செய்.238) முன்னோடியாகத் திகழ்கின்றது.
- பெருந்தேவனார் பாரதமும், தகடூர் யாத்திரையும். சிலம்பும் **"உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்"** வகையைச் சேர்ந்தவை ஆகும்.

தொல்காப்பியனார்.

"அங்கதம் முதுசொலொ டவ்வேழ் நிலத்தும்"

- என்று பொருளியலிலும் ஒரு நூற்பாவினை அமைக்கிறார். இந் நூற்பா நூல் புணர்க்கும் முறை ஏழு பிரிவென்றும் அவற்றில் ஒன்று **"உரையாப்பு"** வகை என்றும் விதந்தோதுகிறது.

பேராசிரியர் மு.வை. அரவிந்தனின் **"உரையாசிரியர்கள்"** இவ்வகைமையற்றித் தோன்றிய முதற்பெருநூலாகும். முனைவர்கள் இரா.மோகன், நெல்லை ந. சொக்கலிங்கம் இருவருமெழுதிய **"உரைமரபுகள்"** நூல் குறிப்பிடற்பாலது.

கவிமணி அவர்கள் மூல ஆசிரியரை விட உரையாசிரியரே சிறந்தவர், என நகைச்சுவை தோன்றக் கூறினார்.

"கண்ணைக் கெடுப்பர் கவிராயர் : அக்கண்ணை
எண்ணி உரைகாரார் ஈவாரோ – மண்ணுலகில்
ஆக்குபவரோ அழிப்பவரோ மேலாவார்
நோக்கிநீ உண்மை நுவல்"

"கண்" என்பது போன்ற வேற்றுமையுருபுகளைத் தொகுத்துக் கூறுவது இலக்கியம் உரையோ அவற்றை விரித்து விளக்கும். உண்மையில் மூல நூல்களை உள்ளவாறு காண உதவும் கண்களே உரைகள் எனலாம். வட மொழியில் உரைகளுக்கு "லோசனம்" (கண்) எனப்பெயர் வைக்கும் மரபுண்டு.

TEACHERS CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem
Trichy: 76399 67359 Salem: 93602 68118

UNIT IX
QUESTIONS

1. கலப்புத் திருமணத்தைக் கருவாகக் கொண்ட அண்ணாவின் புதினம்

A) ரோமாபுரிப் பாண்டியன் B) ரங்கோன் ராதா

C) நெஞ்சின் அலைகள் பார் D) குமரிக்கோட்டம்

2. தமிழ்நாட்டின் மாப்பசான்

A) புதுமைப்பித்தன் B) ஜெயகாந்தன்

C) இராஜாஜி D) கல்கி

3. வள்ளுவம் என்னும் நூலின் ஆசிரியர்

A) மு.வரதராசனார் B) வ.சுப மாணிக்கம்

C) மா . இராசமாணிக்கனார் D) இலக்குவனார்

4. சங்க இலக்கியத்தில் இயற்கை என்னும் ஆராய்ச்சி நூலை எழுதியவர்

A) இலக்குவனார் B) வ.சுப . மாணிக்கம்

C) மு.வரதராசனார் D) திரு.வி.க.

5. தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர்

A) பாவாணர் B) திருவிக

C) பெருஞ்சித்திரனார் D) மறைமலை அடிகள்

6.முதல் தமிழ் உரைநூல்

A) சிலப்பதிகார உரை B) இறையனார் அகப்பொருள் உரை

C) பத்துப்பாட்டுரை D) சிந்தாமணி உரை

7.தமிழிசைச் சங்கத்தைத் தோற்றுவித்தவர்

A) முத்தையா செட்டியார்

B) நவாப் ராஜமாணிக்கம்

C) அண்ணாமலைச் செட்டியார்

D) அண்ணாநகர் கவிராயர்

8. காப்பியத்திற்கு நிகரான உரைநடை இலக்கியம்.

A) சிறுகதை

B) புதுக்கவிதை

C) நாடகம்

D) புதினம்

9. தமிழ்க்காவலர் என்றும் தற்கால உரைநடையின் தந்தை என்றும் போற்றப்படுபவர்

A) ஆறுமுக நாவலர்

B) மறைமலை அடிகள்

C) திரு.வி.க.

D) வீரமாமுனிவர்

10. தமிழ் மேடைப் பேச்சின் தந்தை என அழைக்கப்படுபவர்

A) ஆறுமுக நாவலர்

B) ரா.பி. சேதுப்பிள்ளை

C) மறைமலை அடிகள்

D) திரு.வி.க.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

தமிழ்

UNIT-10

PG-TRB (2020-2021)

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 10 (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்
12 ஆம் வகுப்பு வரை
உள்ள பொதுத் தமிழ்
மற்றும்
சிறப்புத் தமிழ் (+1)
சிறப்புத் தமிழ் (+2)

COMPETITIVE EXAM
FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

PG TRB HISTORY 2020 - 21
UNIT – X (VOLUME-I)

<u>நாடகக்கலை</u>

இடம் : வகுப்பறை

கதை மாந்தர்கள் : ஆசிரியர் , மாணவ, மாணவியர்

ஆசிரியர் : வணக்கம் மாணவர்களே!

மாணவர்கள் : வணக்கம் அம்மா!

ஆசிரியர் : உங்களில் யாரெல்லாம் நாடகம் பார்த்திருக்கிறீர்கள்?

மாணவர் : எல்லாரும் நாடகம் பார்த்திருக்கிறோம் அம்மா. தொலைக்காட்சி இருக்கும் வீடுகள் எல்லாவற்றிலும் நாள்தோறும் நாடகங்களைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்?

ஆசிரியர் : அப்படியா !நீங்கள் பார்த்த நாடகங்களின் பெயரை ஒவ்வொன்றாகச் சொல்ல முடியுமா?

(மாணவர்கள், சில தொலைக்காட்சித் தொடர்களின் பெயர்களைச் சொல்கிறார்கள்)

ஆசிரியர் : சரி, அந்தத் தொலைக்காட்சிகளில் நீங்கள் காண்பனவற்றை 'நாடகம்' என்றுதான் சொல்வார்களா?

மாணவி : இல்லை . நாடகம் என்று சொல்லவில்லை; தொடர் என்றுதான் சொல்கிறார்கள்.

ஆசிரியர் : அவர்களே தொடர் என்று சொல்லும் போது, நீங்கள் மட்டும் நாடகம் என்று சொல்லலாமா?

மாணவி : தினந்தோறும் அவற்றைப் பார்ப்பவர்கள் பொதுவாக நாடகம்' என்றுதான் சொல்கின்றனர். அதனால் தான் நானும் நாடகம் என்று

சொன்னேன்.

ஆசிரியர் : அவர்களுக்கு நாடகங்களின் வகைகள், உத்திகள் போன்றவை தெரியாததால் தொலைக்காட்சித் தொடர்களை நாடகம் என்று சொல்கிறார்கள். அவர்கள் பார்ப்பவை நாடகங்கள் அல்ல என்பதை நாடகக் கலையைப் பற்றித் தெரிந்து கொண்டபின் நீங்கள் தாம் உணரச்செய்ய வேண்டும்.

மாணவர் : நாங்கள் நாடகக் கலையை அறிந்துகொள்ள ஆர்வமாக இருக்கிறோம்

அம்மா! எங்களுக்குச் சொல்லித்தாருங்கள்.

ஆசிரியர் : மாணவர்களே! இந்த நூலைப் பாருங்கள். என்ன நூல் இது?

மாணவி : இது நாடக நூல்.

ஆசிரியர் : எப்படிச் சொல்கிறாய்? மாணவி : அடைப்புக்குழுக்கள் காட்சி, இடம், கதைமாந்தர்கள் எல்லாம் கொடுத்திருக்கிறார்களே! அப்படி இருப்பது நாடகநூல் தானே...! நூலகத்தில் இது அச்சிடப்பட்ட நூல்களை நாடகம் என்ற பகுதியில் பார்த்திருக்கிறேன்.

ஆசிரியர் : ஓ அப்படியா? உங்களுக்கு என் பாராட்டுகள். (நாடகநூலை உயர்த்தி காட்டுகிறார்) நூலின் இடப்பக்க ஓரத்தில் மாற்றி ஒருவர் பேசுவதாக இருப்பது தான் நாடக நூலின் தனித்த அடையாளம். அதற்குப்பெயர் உரையாடல் என்பதாகும். உரையாடல்தான் நாடகத்தின் அடிப்படை அலகு. இது நாடகம் என்னும் இலக்கிய வடிவத்தை உருவாக்குகிறது.

மாணவி : கதைமாந்தர்கள் தங்களுக்குள் பேசுவதுதான் உரையாடலா அம்மா?

ஆசிரியர் : பொதுவாக உரையாடலுக்கு இரண்டுபேர் வேண்டும். இரண்டு கதை

மாந்தர்களோ, இரண்டுக்கும் மேற்பட்டவர்களோ உரையாடுவது உரையாடல்.

மாணவி : உரையாடல் இல்லாமல் நாடகம் இருக்காதா?

ஆசிரியர் : பொதுவாக நாடகங்கள் உரையாடல்களோடு அமைந்திருக்கும். உரையாடல் வேறு வடிவத்திலும் அமையலாம். உரையாடல் இல்லாமல் மௌனநாடகங்களும் நடைபெறுவதுண்டு.

ஒருவரே தமக்குள் பேசிக்கொள்வது போன்ற பேச்சு மொழியுடன் நாடகம் அமையலாம். பேச்சுமொழிக்குப் பதிலாக உடல்மொழி வழியாகவும் உரையாடலை நாடகம் உருவாக்கிக்கொள்ளும்.

TEACHER'S CARE ACADEMY

மாணவி : உடல்மொழியா? அப்படியென்றால் என்ன அம்மா?

ஆசிரியர் : வாயால் பேசுவதை வாய்மொழி என்பதுபோல, மற்றவர்களுக்குப் புரிகிற உடலசைவுகளும் சைகைகளும் உடல்மொழி எனப்படும்.

மாணவர் : பேசும்போது உடலை அசைப்போமே அதுவா?

ஆசிரியர் : ஆம்! பேச்சு மொழிக்கு முன்பு சைகையில் தான் மனிதர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். நாடகத்தில் உடல் அசைவும் உரையாடலும் இணைந்திருக்கும். இப்போது நாடகத்தின் புறவடிவத்தைத் தெரிந்து கொள்வோம். புறவடிவத்தில் காட்சி என்பது முக்கியமானது. காட்சியை நிகழ்வு என்றும் குறிப்பிடலாம். உங்கள் கையில் இருக்கும் நூலில் காட்சிகள் இருக்கின்றன அல்லவா?

மாணவர் : காட்சியுடன் அங்கம் என்றொரு சொல்லும் இருக்கின்றதே!

ஆசிரியர் : உரையாடல், காட்சி, அங்கம் ஆகிய மூன்றும் இணைந்தது நாடகம். இம்மூன்றையும் புறக்கட்டமைப்பின் கூறுகள் என்கிறோம். உரையாடல் என்பது சிறிய அலகு . உரையாடல்களால் ஆனது காட்சி. காட்சிகளால் ஆனது அங்கம். அங்கங்களால் ஆனது நாடகம்.

மாணவர் : காட்சியை நிகழ்வு என்று சொன்னீர்களே அம்மா!

ஆசிரியர் : ஆமாம், காட்சிதான் நிகழ்வு. ஓரிடத்தில் ஒருவர் மற்றொருவரோடோ, தமக்குள்ளேயோ பேசிக்கொள்ளும் உரையாடல், நிகழ்வாக மாறுகிறது. அந்த நிகழ்வுதான் நாடகத்தில் காட்சி என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது.

மாணவர் : காட்சியை எவ்வாறு வரையறை செய்வது அம்மா?

ஆசிரியர் : காட்சியை வரையறை செய்ய, களம் அவசியம். நாடகம் நிகழும் சூழலை உணர்த்துவது களம். இதனை வெளி என்றும் கூறலாம். இந்த நிகழ்வு முடியும்போது ஒரு காட்சிமுடிந்துவிடுகிறது.அப்படி முடியும்போது, அந்நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் இடம் மாறலாம் அல்லது புதிதாக ஒருவர் உள்ளே வரலாம். இதனால் ஏற்படும் மாற்றத்தையே காட்சி மாற்றம் என்பர். உதாரணமாக நாம் பேசிக்கொண்டிருக்கும் போது தலைமையாசிரியர் வகுப்பறைக்குள் வந்தால், நாம் பேசும் பொருள் மாறும் அல்லவா? அப்படிமாறும்

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 10 (தொகுதி – 2)

COMPETITIVE EXAM
FOR
PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

PG TRB HISTORY 2020 - 21
UNIT – X (VOLUME-II)

நாடக இலக்கியம் & திறனாய்வு

உள்ளடக்கம்

- நாடக இலக்கிய தோற்றம்
- அமைப்பு, மூவகை, இணைவு முரண்
- குறிப்பு முரண், மூன்று குரல்கள்
- பழைய நாடகங்கள், பழங்கதைகள்
- முத்தமிழ், இசை நாடக இலக்கியம்
- இசைத்தமிழ்
- நாடக இலக்கிய வளர்ச்சி
- மனோன்மணீயம்
- சங்கரதாஸ் சுவாமிகள்
- ஔவை சண்முகம்
- பம்மல் சம்மந்த முதலியார்
- மனோகர், சோ
- நாடகங்களின் வகைகள்
- கீர்த்தனை நாடகம்
- நொண்டி நாடகம், பள்ளு குறவஞ்சி நாடகம்
- மேடை நாடகப் புதுமை மரபுகள்
- சமூக நாடகங்கள், மொழிபெயர்ப்பு நாடகங்கள், புராண நாடகங்கள், நாடோடிக்கதை, நாடகங்கள், பக்தி நாடகங்கள்

முக்கிய நாடகக்குழுக்கள்

வ. எண்	நாடகக்குழுவின் பெயர்	நிறுவியவர்
1	இராகினி கிரியேஷ்னஸ்	கே.பாலச்சந்தர்
2	என்.எஸ்.நாடகசபா	என்.எஸ்.கிருஷ்ணன்
3	எம்.ஜி.ஆர்.நாடக சபா	எம்.ஜி.ராமச்சந்திரன்
4	சங்கரதாஸ்சுவாமி நாடக சபா	இராஜநாயகம் டி.எம்
5	சேவா ஸ்டேஜ்	எஸ்.வி.சகஸ்ரநாமம்
6	நேஷனல் தியேட்டர்ஸ்	மனோகர்
7	பால் மனோகர் சபா	தே.போ.கிருஷ்ணசாமி பாவலர்
8	மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி	சச்சிதானந்தம் பிள்ளை
9	மதுரை தேவி பால வினோத சங்கீத சபா	ராஜமாணிக்கம் பிள்ளை டி.எஸ்.நவாப்
10	மதுரை ஶ்ரீ பால சண்முகானந்த சபா	டி.கே.எஸ்.சகோதரர்கள்
11	மனமோகன் நாடகக் கம்பெனி	கோவிந்தசாமி ராவ்.நவாப்
12	விவேகா ஃபைன் ஆர்ட்ஸ்	இராமசாமி.சோ
13	ஶ்ரீசக்தி நாடக சபா	கிருஷ்ணசாமி டி.கே.
14	மனமோகனா நாடகக் கம்பெனி	(தஞ்சை) கோவிந்தசாமிராவ்
15	சமரச சன்மார்க்க சபை	சங்கரதாஸ் சுவாமிகள்
16	பாய்ஸ் கம்பெனி	சங்கரதாஸ் சுவாமிகள்
17	சுகுண விலாச சபா	பம்மல் சம்மந்த முதலியார்
18	தேவி நாடக சபா	கே.என்.ரத்தினம்
19	ஸ்டெஜ் இமேஜ்	லியோ பிரபு
20	ஶ்ரீ கிருஷ்ண விநோத சபா	சி.கண்ணையா
21	கலா நிலையம்	பூர்ணம் விஸ்வநாதன்
22	சாந்தி நிகேதன்	டி.எஸ்.சேஷாத்திரி
23	யுனைடெட் அமெச்சூர் ஆட்ர்ஸ்	ஓய்.ஜி.பார்த்தசாரதி
24	விஷ்ணுபிரியா	கோவை ராசேந்திரன்
25	நாடகப்பிரியா	எஸ்.வி.சேகர்
26	ஐ.என்.ஏ.தியேட்டர்ஸ்	வி.எஸ்.ராகவன்
27	என்.எஸ்.தியேட்டர்ஸ்	என்.எஸ்.நடராசன்
28	சரச விநோதினி சபை	பெல்லாரி கிருஷ்ணமாச்சாரி
29	கோபி தியேட்டர்ஸ்	கோமஸ் சுவாமிநாதன்

TEACHER'S CARE ACADEMY

நாடக இலக்கியம்

❖ தமிழ் நாடகம், தொன்மைக்காலத்தில் நிலவி வந்த சமயக் கூத்துக்களினின்றும் உருவாகிறது.

❖ சமயக் கூத்துக்கள் காலப்போக்கில் சமயச் சார்பினையிழந்து பொழுதுபோக்குக் கூத்துக்களாக மாறின

❖ பொழுதுபோக்குக் கூத்துக்களில் ஆடல்களுடன் இணைந்த பாடல்களில் உடையாடல்களும் இணைந்தன.

❖ உரைப்பாடல்களும் ஆடல்களுமாக அமைந்து, கதையை விளக்கியபோது கூத்து நாடகமென்னும் முழு வடிவும் பெற்றது.

❖ பண்டைய நாடகங்கள் கூத்துக்கள் என அழைக்கப்பட்டன.

❖ சங்க காலத்தில் தமிழகத்தில் நடனக்கலை வல்லுநர்கள் கூத்தர் விறலியர் என்றும் நடிகர்கள் பொருநர் என்றும் அழைக்கப்பட்டனர்.

❖ தமிழகத்தில் நாடகக்கலை தொல்காப்பியத்திற்கு முற்பட்டே உள்ளதென்பதை,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலனெறி வழக்கினும்"

- இப்பாடல் மூலம் அறியலாம்.

❖ சங்க இலக்கியங்களில் குரவைக்கூத்து முதலான நாட்டிய ஆடல்கள் ஆடப்பட்டதை நற்றிணை, மதுரைக்காஞ்சி கூறுகிறது.

❖ சங்க காலத்தில் வேத்தியல், பொதுவியல் என்ற இருவகை நாடகங்கள் நடிக்கப் பெற்றதாகச் சிலம்பு கூறுகிறது.

❖ நாடகம் நடைபெறுமிடத்தை கூத்தாட்டவை எனத் திருக்குறள் கூறுகிறது.

❖ பரதம், அகத்தியம், மதிவாணன் நாடகம், பரதசேனரதிபதியும் பஞ்சமரபு, முறுவல், சமயந்தம், செயிற்றியம் முதலிய நாடகநூல்களை அடியார்க்கு நல்லார் தன் உரையில் சுட்டுகிறார்.

❖ கி.பி. 3 – 5 நூற்றாண்டுகளில் தமிழ் நாடகம் தளர்ச்சியடைந்திருந்தது.

❖ இந்தியாவில் தோன்றிய முதல் நாடகம் – **பரதரின் நாட்டிய சாத்திரம்**

❖ "பாமர மக்களின் பல்கலைக்கழகம் நாடகம்" என் டி.கே.சண்முகம் கூறியுள்ளார்.

❖ "ஒருமுக எழினி" பொமுக எழினி கரந்துவரல் எழினி என்ற மூவகை திரைச்சீலைகள் இருந்ததென சிலம்பு கூறுகிறது.

பல்லவர் காலத்தில் நாடகக்கலை

❖ பல்லவர் காலத்தில் நாடகம் மறுமலர்ச்சி பெறத் தொடங்கியது

❖ சிலம்பு காலத்தில் பாட்டும் கூத்துமாக இருந்த நாடகக் கலை பல்லவர்காலத்தில் நடிப்பும் உரையாடலும் கலந்த வடிவமானது

❖ பல்லவர் காலத்தில் முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் எழுதிய "மத்தவிலாசப் பிரகடனம்" நாடகம் மிகவும் குறிப்பிடத்தக்கது

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018

B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 Salem: 93602 68118

UNIT X

QUESTIONS

1. கூத்துப்பட்டறை நாடா இயக்கத்தை உருவாக்கியவர்.

A) மு.இராமசாமி

B) வேலுசரவணன்

C) பம்மல் சம்மந்த முதலியார்

D) ந.முத்துசாமி

2. தோழர் கலகக்காரர் பெரியார் பெரியார் என்னும் நாடகத்தை இயற்றியவர்

A) இன்குலாப்

B) வ. ஆறுமுகம்

C) மு. இராமசாமி

D) வைரமுத்து

3. தமிழ்நாடகத்தின் தாத்தா என அழைக்கப் படுபவர்

A) நவாப் கோவிந்தசாமி ராவ்

B) டிகோ சகோதரர்கள்

C) ச. முத்துசாமி

D) பம்மல் சம்பந்த முதலியார்

4. முகம்மதுபின் துக்ளக் என்னும் நாடகத்தை எழுதியவர்

A) இன்குலாப்

B) சோ. இராமசாமி

C) சங்கரதாஸ் சுவாமிகள்

D) மனோகர்

TEACHER'S CARE ACADEMY

5. வடிவம் எனும் திறனாய்வு வகையில் கீழ்க்கண்ட வற்றுள் எது அடங்கும் ?

A) மெய்ப்பாடு

B) உவமை

C) யாப்பு

D) வண்ணம்

6. இலக்கியக் கலை என்னும் நூலின் ஆசிரியர்

A) மு.வரதராசனார்

B) தா.ஏ. ஞானமூர்த்தி

C) வ.சுப மாணிக்கம்

D) அ.ச ஞானசம்பந்தம்

7. சட்டைப்பை நாடகம் என்பது

A) ஓரங்கநாடகம்

B) சிறுகதை

C) புதினம்

D) காப்பியம்

8. ஒரு நாடகக் கதையின் பகுதிகள் (சந்திகள்)

A) 4

B) 5

C) 6

D) 6

9. தமிழ்வாணன் எழுதியவை பெரும்பாலும்

A) வரலாற்றுக் கதைகள்

B) சமூகப் புதினங்கள்

C) வட்டார நாவல்கள்

D) துப்பறியும் நாவல்கள்

10. பொன்னியின் செல்வன் என்னும் புதினம்

A) இராசேந்திர சோழன் பற்றியது

B) குலோத்துங்கன் பற்றியது

C) நந்திவர்மன் பற்றியது

D) இராசராசன் பற்றியது

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1

Mobile : 95665 35080, 97862 69980

Help Line Numbers : 9360268118 7639967359

UNIT-11

தமிழ்

PG-TRB (2020-2021)

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 11 (தொகுதி - 1)

ஆறாம் வகுப்பு முதல்
12 ஆம் வகுப்பு வரை
உள்ள பொதுத் தமிழ்
மற்றும்
சிறப்புத் தமிழ் (+1)
சிறப்புத் தமிழ் (+2)

COMPETITIVE EXAM
FOR

PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

PG TRB HISTORY 2020 - 21
UNIT – XI (VOLUME-I)

கவிதை – ஒரு பார்வை

கவிதை ஒரு மொழியின் மேன்மையான வெளிப்பாடு. மொழியின் அனைத்துக் கூறுகளையும் கொண்டு உருவாகும் கலை கவிதையைப் போல் வேறேதுமில்லை. அதனால்தான் ஒரு மொழியின் மாண்பும் செறிவும் அழகும் அம்மொழியின் கவிதைகளைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன. தமிழ்ச் சமூகத்தின் பாரம்பரியம் மிக்கப் பண்பாட்டின் வேர்கள், தமிழ்க் கவிதைகளின் வழியாகவே கிளை விரிகின்றன.

தனது கவிதை இலக்கியத்தால்தான், உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் வைத்து, தமிழ் போற்றப்படுகிறது. உலகின் பிற மொழிகளோடு ஒப்பிடுகையில் தமிழ்க்கவிதைகளின் தொன்மை, மரபு, பிறமொழிச்சார்பின்மை, இடையறாத தொடர்ச்சி ஆகியன தனிச்சிறப்பு வாய்ந்தவை. அதைப்போலவே இயற்கை சார்ந்த மக்கள் வாழ்வியலைக் கொண்ட கவிதைகள், தமிழில் தான் முதலில் எழுதப்பட்டன.

சங்ககாலக் கவிதைகள்

சங்ககாலக் கவிதைகள் தமிழரின் உயர்ந்த நாகரிகச் செழுமைக்கு அடிப்படையாக அமைந்தவை. இவை **அகம்**, **புறம்** சார்ந்த வாழ்வியல் நெறிகள், **கலைகள்**, **கல்வி**, **அரசியல்**, **பொருளாதாரம்**, **வணிகம்**, **வேளாண்மை** குறித்த பதிவுகளை வெளிப்படுத்துகின்றன.

அகம்

மாந்தர் அகமனத்தின் தூய்கின்ற காதல், அன்பு, கருணை முதலான உணர்வுகளை வெளிப்படுத்துவது அகத்திணை.

புறம்

மாந்தர், புறவாழ்வில் கொண்டாடுகின்ற வீரம், கொடை, புகழ் முதலான பண்புகளை வெளிப்படுத்துவது புறத்திணை.

அகம், புறம் சார்ந்த சங்ககாலக் கவிதைகள் **பத்துப்பாட்டு**, **எட்டுத்தொகை** என நூல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் **ஆசிரியப்பா**, **வஞ்சிப்பா**, **கலிப்பா** ஆகிய பா வகைமைகளில் அமைந்தவை.

சிறகிழந்த நாரை

எட்டுத்தொகையில் ஒன்றான குறுந்தொகை, தலைவி மீதான தலைவனின் அன்பும், சிறகிழந்த நாரையாய்த் தலைவிக்காக அவன் வருந்துவதையும் காட்டும் பரணரின் ஓர் அகத்திணைப் பாடல்,

குணகடல் திரையது பறைதபு நாரை
திண்தேர்ப் பொறையன் தொண்டி முன்றுறை
அயிரை ஆரிரைக் கணவண்ட் தாங்குச்
சேயள் அரியோட் பரர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே

- **குறுந்தொகை.128**

கீழ்க்கடலில் எழுந்த அலைக்கு அருகில்நின்ற, முதுமையால் சிறகிழந்த நாரையொன்று, சேரனது மேல் கடற்கரையிலமைந்த தொண்டியென்னும் நகரில் உள்ள பெறற்கரிய உணவாகிய அயிரை மீனைப்பெற வருந்தியிருந்தது. அதுபோல, பெறற்கரியவளாகிய தலைவியைப் பெறும்பொருட்டுத் தலைவனின் நெஞ்சமும் வருந்தியிருந்தாம்.

நீரும் நிலனும்

எட்டுத்தொகையில் ஒன்றான புறநானூற்றில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற **நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார்** அறிவுரை கூறுவதாக அமைந்த ஒரு புறப்பாடல், உணவு கொடுத்தவரே உயிர்கொடுத்தவர். இந்த உடலானது. உணவினாலானது. உணவு என்பது யாது? நிலத்தொடு நீர் சேர்வதுதான். அப்படி இணைத்து வேளாண்மைக்கு உதவுக. அவ்வாறு உதவியவரே உலகத்தில் உயிரையும் உடலையும் நிலைநிறுத்தி வாழ்வித்தவராவர் என்று நீரின்றி அமையாத உடல்குறித்துக் கூறி,

.. .. நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலைத்தோடு நீரே;
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே; - **புறம்.18**

நீர்வளம் பெருக்க, பாண்டிய மன்னனை அறிவுறுத்துகிறார்.

அறநிலைக் கவிதைகள்

சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் வாழ்வியல் அறங்களைக் கற்பிப்பவை. இவை வெண்பா என்னும் யாப்பு வகைமையில் அமைந்தவை. உலகளாவிய அறிஞர்களால் ஒப்பற்ற நூலென ஏற்றுக்கொள்ளப்பட்ட **திருக்குறள்**, **கீழ்க்கணக்கு** நூல்களுள் குறிப்பிடத்தக்கது.

TEACHERS CARE ACADEMY

காப்பியக் கவிதைகள்

மன்னர்களைப் பாடிய காலம் மாறிக் குடிமக்களைக் கவிதையின் பாடுபொருளாய்க் கொண்டெழுந்தவை தமிழ்க் காப்பியங்கள். காப்பியக்கவிதைகள் காதல், வீரம், அறம் என அனைத்தையும் பாடிச் செல்கின்றன. உரையொடு கலந்த கவிதைகளை அறிமுகம் செய்தவை இவை. பிறப்பின் வேற்றுமையொழிப்பு, **பசியின்றி வாழ்தல்**, **வாழ்வின் நிலையாமை** எனக் காப்பியக்கவிதைகளின் தளம் பரந்துவிட்டது. மாந்தருக்கு அறமே நிலையானது என்பதைக் குறிக்கும் மணிமேகலைக் காப்பியத்தில் அமைந்த கவிதை இங்கு நோக்கத்தக்கது.

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை ஆவது

- **புறம்.18**

பக்திமைக் கவிதைகள்

காப்பியக் கவிதைகளுக்குப் பின் இயற்றப்பட்ட தமிழ்க்கவிதைகளின் பாடுபொருள், கடவுளை நோக்கியதாக அமைந்திருந்தது. இறையுணர்வோடு அன்பையும் அறத்தையும் இக்காலக் கவிதைகள் வெளிப்படுத்தின. இறைவன்மீது காதல் கொண்டு எழுதப்பட்ட இக்கவிதைகள் இன்றும் மாறாத்தன்மையோடு பக்திமை மணம் வீசிக்கொண்டிருக்கின்றன.

சிற்றிலக்கியக் கவிதைகள்

பக்திவழியே பயணித்துக் கொண்டிருந்த தமிழ்க் கவிதைகள் பின்னர், சிற்றிலக்கியங்கள் என்னும் விமர்சனப்பாங்கு கொண்ட புதிய வடிவில் மக்களிடம் பேசத்தொடங்கின. சிற்றிலக்கியத்தின் வடிவங்களான. கோவை, உலா, அந்தாதி போன்றவை கடவுள், அரசன், சிற்றரசர்கள், வள்ளல்களைப் புகழ்ந்தன. என்னும் பள்ளு, குறவஞ்சி போன்றவை எளிய மக்களின் வாழ்வியலையும் எடுத்தியம்பின.

தனிப்பாடற் கவிதைகள்

புலவர் பெருமக்கள் தம் கவிப்புலமையைக் காட்ட நல்லதொரு களமாகத் தனிப்பாடல்கள் பயன்பட்டன. **சிலேடை**, **விடுகதை**, **சொற்புதிர்** போன்ற சிந்தைக்கு விருந்தாகும் வகையில் புலவர் பெருமக்கள் பாடிச்சென்ற பாடல்கள் **தனிப்பாடற் திரட்டுகளாக** நமக்குக் கிடைக்கின்றன.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

KANCHIPURAM

தமிழ்

அலகு - 11 (தொகுதி – 2)



COMPETITIVE EXAM
FOR
PG-TRB 2020 – 21

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 Salem: 93602 68118

PG TRB HISTORY 2020 - 21
UNIT – XI (VOLUME-II)

உள்ளடக்கம்

- படைப்பாற்றல்
- மரபுக்கவிதையாளர்கள்
- புதுக்கவிதை
- எழுத்துக் காலம்
- ஹைகூ கவிதைகள்
- கதை
- புதினம்
- கட்டுரை
- நாடகம்
- சாகித்ய அகாதமி விருது
- ஞானபீட பரிசு, உலகத்தமிழ் மாநாடுகள்
- பிறமொழியிலிருந்து தமிழுக்கு, தமிழிலிருந்து பிறமொழிகளுக்கு

பார்வை நூல்கள்

1. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் - வல்லிக்கண்ணன்
2. கவிஞராக - அ.கி. பரந்தாமனார்
3. கவிதையனுபவம் - நா. சுப்புரெட்டியார்
4. கவிதைக் கலை - நா. பார்த்தசாரதி
5. தமிழ்மரபு - பொன். முத்துக்குமரன்
6. நல்ல தமிழ் எழுத வேண்டுமா? - அ.கி.பரந்தாமனார்

படைப்பாற்றல்

படைப்பிலக்கியம்

கவிஞன் அல்லது எழுத்தாளர்களால் புதியதாகப் படைக்கப்பெறுவது படைப்பிலக்கியம்.

மனிதனின் சிந்தனை, அழகுணர்வு, போலச் செய்தல், அதாவது சமூக வாழ்க்கை தொடங்கிய போதே படைப்பிலக்கியம் தோன்றிவிட்டது.

ஹட்சன் கருத்து

தன் எண்ணத்தை வெளியிடும் ஆர்வம், பிறரிடத்திலும் பிறவற்றிலும் காட்டுகிற ஆர்வம், கற்பனை ஆற்றலின் வளர்ச்சி ஆகியவையே படைப்பிலக்கியத்தைத் தோற்றுவித்தன.

பெரிய அளவில் எழுதப்படுகின்ற படைப்புகள் நாவல், நாடகம், வாழ்க்கை வரலாறு போன்றவவையாகும். சிறிய அளவினதாக எழுதப்படுகின்ற படைப்புகள் கவிதை, சிறுகதை, ஓரங்க நாடகம், கட்டுரை போன்றவையாகும்.

படைப்புணர்வு

தகவல்களை ஒன்று திரட்டிப் பல பள்ளி விவரங்களுடன் அப்படியே அறிக்கையாக அளிப்பது கட்டுரையாகிறது. தகவல்களைக் கொண்டு தங்கள் அனுபவத்தின் வாயிலாக ஓர் உண்மையை உருவாக்கி, கற்பனை கலந்த கவிதை. நாவல், சிறுகதை, நாடகம், ஓரங்க நாடகம் எனப் படைப்பதால் இப்படைப்பாளர்கள் கட்டுரையாளர்களைவிட மிகுதியான படைப்புணர்வைப் பெறுகிறார்கள்.

செய்தித்தாள்கள், இதழ்கள், தொலைக்காட்சி, வானொலி முதலான தகவல் தொடர்புச் சாதனங்களின் மூலம் எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளுக்குரிய மூலப்பொருளைப் பெறுகிறார்கள். எழுத்தாளரின் அணுகு முறையில்தான் அது கதை, கவிதை அல்லது காப்பியம் என்ற வேறுபாட்டைப் பெறுகிறது.

படைப்பாளியின் தன்மைகள்

1. கட்டுரைப் படைப்பாளி நிறையப் படித்திருக்க வேண்டும்.
2. இன்னும் நிறையப் படிக்கவும் வேண்டும்.
3. ஆய்வு முறை தெரிந்திருக்க வேண்டும்.
4. தகவல் திரட்டத் தெரிந்திருக்க வேண்டும்.
5. சிறப்புப் பயிற்சியும் வேண்டும்.
6. கட்டுரையாளன் உண்மையை மட்டுமே எழுத வேண்டும்.
7. கதை, கவிதைப் படைப்பாளர்களுக்குக் கற்பனை ஆற்றல் மட்டும் போதுமானதாகும்.
8. ஒரு நிகழ்ச்சி ஓரங்க நாடகமாக்கப்பட்டால் சற்று வேறுபாடு காணப்பெறும்.

TEACHER'S CARE ACADEMY

படைப்புக்கான காரணம்

எழுத்தாளன் தன்னுடைய அனுபவத்தைத் தனக்குத் தெளிவாக்கிக் கொள்ளவும் பிறருக்குச் சொல்லவும் மொழியின் மூலம் அதைப் பாதுகாக்கவும் படைக்கின்றான். ஒரு வீரச் செயலோ, ஒரு பிரச்சனையோ ஓர் ஆளது பண்போ, காதலோ, வெறுப்போ, அவமரியாதையோ, அச்சமூட்டும் நிகழ்ச்சியோ ஏதோ ஓர் அனுபவம் படைப்பின் மூலப் பொருள் ஆகும். அது கவிதையாக கதையாகப் பிறப்பெடுக்கும்.

ஸ்டீவன்சன்

ஸ்டீவன்சன் தன் மகனை மகிழ்விக்க ஒரு தீவின் வரைபடத்தை வரைந்து காட்டினார். பின்னாளில் ‘புதையல் தீவு’ (treasure lslande) என்கிற நாவல் உருவாவதற்கு அவ்வரைபடமே காரணமாயிற்று.

பால்சால்க்

பால்சால்க் பிரெஞ்சு மக்களின் வாழ்ககையைப் பற்றித் தெரியவிரும்பியதால் பிரெஞ்சு அரசியல் வாழ்வு, பிரெஞ்சுப்படை வீரர் வாழ்வு, பாரிஸ் நகர வாழ்வு என்று ஒரு படைப்பிலிருந்து இன்னொரு படைப்புக்கான பொறியைப் பெற்று எழுதினார்.

கால்ஸ்வொர்த்தி

கால்ஸ்வொர்த்தி ஒரு குடும்பத்தின் வரலாற்றைப் பரம்பரையாகச் சொல்வது போலப் பல காலப்பகுதிப் பிரெஞ்சு வாழ்க்கையை வெளியிட்டார்.

கல்கி

ஒரு படைப்பாளியின் படைப்பு இன்னொரு படைப்பாளியைத் தூண்டலாகும். கல்கியின் ‘பொன்னியின் செல்வன்’ நாவலில் வரும் நந்தினி பாத்திரத்தைக் கொண்டு தொடர்ச்சியாக விக்கிரமன் ‘நந்திபுரத்து நாயகி’ என்ற நாவலைப் படைத்தார்.

படைப்பிலக்கியத்தின் பயன்கள்

1. உலக நிகழ்ச்சிகளை எடை போடுகிறார்கள்.
2. நிகழ்ச்சிகளுக்கு விளக்கமளிக்கிறார்கள்.
3. தத்துவவாதிகள் போன்று வெறும் உண்மைகளை முரட்டுத்தனமாகக் கூறாமல் அழகியல் கலந்து வெளியிடுகிறார்கள்.
4. காலங்காலமாக இந்தப் படைப்புகள் மனித வளர்ச்சிக்குக் காரணமாகின்றன.
5. மனிதன் படைப்புகளைப் படைப்பதும், படைப்புகள் மனிதனைப் படைப்பதும் என்பதில்தான் படைப்பிலக்கியத்தின் மேன்மையும் மனித மேன்மையும் இருக்கிறது.
6. படைப்பாளன், படைப்பின் மூலம் அழகியலை மேம்படுத்துகிறான்.
7. தன்னையே படைப்பிற்கு வழங்குகிறான்.
8. தன்னைப் புரிந்து கொள்கிறான்.
9. படைப்பாளனின் அக உலகம், புற உலகத்தைத் திருத்துகிறது, அழகுபடுத்துகிறது.
10. புறஉலகம், படைப்பாளியின அக உலகத்திடமிருந்து மருந்து பெறுகிறது. அறிவு பெறுகிறது.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 **Salem: 93602 68118**

UNIT XI

QUESTIONS

1. முதல் தமிழ் ஹைகூ கவிதை நூல்

A) கூடைக்குள் தேசம் வீழ்

B) சிறகுகளின் சுவடுகள்

C) சூரிய பிறைகள்

D) புள்ளிப் பூக்கள்

2.கருப்புமலர்கள் என்னும் புதுக்கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்

A) வைரமுத்து

B) மீ. ராஜேந்திரன்

C) நா. காமராசன்

D) அப்துல் ரகுமான்

3. மணிக்கொடி இதழின் ஆசிரியர்

A) பி.எ. இராமையா

B) கல்கி

C) சுப்பிரமணிய பாரதியார்

D) மணியன்

4. படைப்பாற்றலுக்குக் காரணமான தன்வெளிப்பாட்டுத்துடிப்பில் அடங்குவன

A) அனுபவப் பரிமாற்றத்துடிப்பு, புகழ் வேட்கை, தெய்வீகத் தூண்டல்

B) புகழ்வேட்கை, இன்புறுத்தத் தூண்டும் . துடிப்பு, புதுமைப் புலப்பாட்டுத் துடிப்பு

C) அனுபவப் பரிமாற்றத்துடிப்பு, புதுமைப் புலப்பாட்டுத் துடிப்பு, இன்புறுத்துற்றுடிப்பு

D) தெய்வீகத் தூண்டல், புகழ்வேட்கை, இன்புறுத்தற்றுடிப்பு

5.கவிதை உண்மை என்பது

A) நடப்பது

B) நடப்பிற்கு அப்பாற்பட்டது

C) எப்படி இருக்கவேண்டுமே அப்படி இருப்பது

D) பொய்யானது

6. புதின உரையாடலில் பயன்

A) பாத்திரப்பண்பை விளக்கல்

B) சுவையூட்டல்

C) திறமை உணர்த்தல்

D) நாடகமாக்க முயலல்

7. உணர்ச்சிக் கதைகள் தமிழில்

A) மிகுதி

B) குறைவு

C) இல்லை

D) அளவாக அமைந்துள்ளது

8. நாடக ஆசிரியனுக்கு இல்லாத புதின ஆசிரியனுக்கு உரிய வாய்ப்பு

A) வருணனை

B) கற்பனை

C) உணர்ச்சி

D) ஆசிரியர் இடையீடு

9. ஆய்வுக்கட்டுரை , கட்டுரை இலக்கியம் ஆகாமைக்குக் காரணம்

A) வடிவம் இன்மை

B) கருத்து இன்மை

C) தொடர்ச்சி இன்மை

D) உணர்ச்சியும் கற்பனையும் இன்மை

10. கவிதையின் உயிர்நாடி

A) கருத்து

B) உணர்ச்சி

C) கற்பனை

D) வடிவம்

TEACHER'S CARE ACADEMY

For more details Contact
9566535080, 9360268118
7639967359

Online Class for PG-TRB Started

PG-TRB (2020-2021)

All 10 Units & Also Psychology Covered

Website www.tcaexamguide.com

Mobile App tcaexamguide

Experienced professors & Any time any where access to class

Multiple time can be watched & Access from Mobile app and Website

Teachers care Academy is the foremost coaching Institution for various competitive examinations such as P.G.TRB, TET Papers I &II TNPSC including special Teachers Eligibility Test. The Academy was established on 5th April 2013 by learned energetic and multifaceted chairperson Mrs. RAVIMAGESHWARI in the holy temple town of Kanchipuram.

Our Other Competitive Exam. Guides

- PG-TRB (Tamil, English, Mathematics, History, Physics, Chemistry, Commerce, Economics, Botany, Zoology)
- Polytechnic-TRB (English, Mathematics, Physics, Chemistry, CSE, ECE, Civil, EEE, Mech)
- Computer Instructor Grade-1
- Block Educational Officer
- Teachers Eligibility Test (TET Paper-1 & Paper-2) & UG-TRB
- TNEB – Assessor
- Tamil Nadu – Forest Guard
- TNPSC (Group-1, Group-2, Group-3, Group-4)
- NEET

Your Success is Our Goal....

Teachers Care Academy

tcaexamguide

tcaexamguide@gmail.com

www.tcaexamguide.com

Teachers Care Publication

38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1

Mobile : 95665 35080, 97862 69980

Help Line Numbers : 9360268118 7639967359

2nd Edition